விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464

# ஈழநாடு வார மலர்

*THE EELANADU VARAMALAR*

நீம்வாசனை சோப்

உங்கள் சருமப் பாதுகாப்புக்கு சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப்பை வாங்கி உபயோகியுங்கள்.

ஓர் மில்க்வைற் உற்பத்தி

மலர் 19 | மாசி 23 | ரபிஅவ்: 15 | ஞாயிற்றுக்கிழமை | [6—3—77] | இதழ் 24

# நாட்டின் அபிவிருத்திக்கு 35 கோடி ரூபா ஒதுக்கீடு!

## மின்சார வேலைகளுக்கு தொகுதிக்கு தலா 3 லட்சமும் 77ல் கிடைக்கும்

கொழும்பு, புதன் நாட்டின்அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்கம் பன்முக வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 35 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அத்துடன் மின்சார அபிவிருத்திவேலைகளுக்காகச் சகல தொகுதிகளுக்கும் தலா 3 லட்சம் ரூபாவை இந்த ஆண்டு அரசு ஒதுக்கியுள்ளது.

கடந்த 3 வருடங்களில் அரசு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் நாட்டின் கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, சுகாதார அபிவிருத்தி வேலைகளுக்காக 61 கோடியே 80லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## த. கா. தலைவர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழ்க்காங்கிரஸ் புதிய தலைவர் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி 202-ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுவார்.

இக்கூட்டத்தில் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஞாபகச்சின்னம் மற்றும் அஞ்சலிக்கூட்டங்கள் பற்றியும் முடிவு செய்யப்படவுள்ளது.

தமிழ் ஆராய்ச்சி ஆய்வுகூடம் அடங்கிய ஜி. ஜி.யின் ஞாபகார்த்த மண்டபம் ஒன்றை வடபகுதியில் நிறுவுவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும். (க.அ)

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு ஐக்கியதேசியக்கட்சியின்பிரசாரக் கருத்தரங்கு இன்று ஞாயிறு மாலை சுதுமலை சிவன் ஆலயமுன்றலில் நடைபெறுகிறது. திரு. எஸ். சூரியகுமார் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் திருவாளர்கள் ஆர். ஆர். நல்லையா, எஸ், அலோசியஸ் உட்பட மற்றும் பலர் பேசுவர்.

## ஊரெழுவில் கூட்டணிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழர்விடுதலைக்கூட்டணிப் பொதுக்கூட்டம் ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் நாளை (திங்கட்கிழமை) மாலை திரு. சு.சபாரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, திரு. ஏ. அமிர்தலிங்கம, வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா மற்றும் பலர் உரைநிகழ்த்துவார்கள். (க)

## பூகம்பத்துக்கு 1000பேர்பலி!

புக்காரெஸ்ட்; மார்ச், 5 ருமேனியாவில் நேற்று இடம்பெற்ற பயங்கர பூகம்பத்தினால் 1000பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டது.

இப்பூகம்ப அதிர்ச்சியினால் சோவியத் யூனியனின் ருமேனிய எல்லை அருகே இருந்த பல கட்டிடங்கள் இடிந்துவிழுந்தன என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். நாயன்மார்க்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழக ஆதரவில் ஸ்ரீஇராசராசேசுவரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வள்ளுவர் விழாநிகழும். வள்ளுவர் நினைவையொட்டி, அதிகாலை 5-00மணிக்குதிருக்குறள் வீதி பஜனையும் விசேட பூசையும் ஆலயத்தில் இடம்பெறும்.

## வளாக மாணவர்க்கிடையில் கருத்து வேறுபாடில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாண வளாகம் வட்டுக்கோட்டைப் பகுதியில் அண்மையில் இரு மாணவர்கள் காயமுற்ற சம்பவம் தொடர்பாக மேற்படி வளாக மாணவர் மன்றம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சில பத்திரிகைகள் மேற்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகத் தவறான செய்திகளைப் பிரசுரித்துள்ளன. எனினும் இதுசம்பந்தமான உண்மை பின்வருமாறு;-

1-3-77-ம் திகதியன்று வட்டுக்கோட்டைப் பிரதான வீதியில் வளாகத்திற்கு வெளியில் மாணவர்களுக்கும் வெளியாட்களுக்கு மிடையில் சண்டை நடந்தது. இச்சம்பவத்தில் இரு மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. அவர்கள் தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

மாணவர் மன்றம் இச்சம்பவம் மாணவர்களுக்கிடையில் ஏற்பட்டதொன்றல்ல என்பதை வலியுறுத்துவதுடன், மாணவர்களுக்கிடையில் இவ்வித கருத்து வேறுபாடு எதுவுமில்லை என்பதை வலியுறுத்துகின்றது. விரிவுரைகள் வழமைபோல் நடைபெறுகின்றன.

## யாழ் வீடொன்றில் அபின்!

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் திரு. என். சேனாதிராசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று வண்ணார் பண்ணையிலுள்ள வீடொன்றில் சுமார் 21இருத்தல் அபினையும், 5 பெறுமதி வாய்ந்த சாறிகளையும் கைப்பற்றியது.

கைப்பற்றப்பட்ட பொருட்களும், இரு பெண்சந்தேக நபர்களும் யாழ். சுங்கப் பகுதியில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சங்கானை வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக

## சத்தியாக்கிரகம் நடத்த சம்மேளனம் முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு சங்கானை ப. நோ. கூ. சங்க ஊழியர் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக இலங்கைகூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் வடபிராந்தியக் கிளையும் நடவடிக்கையில் இறங்க தீர்மானித்துள்ளது

மேற்படி சம்மேளனத்தின் வடபிராந்தியக் கிளை பிரதிநிதிகளின் கூட்டம் நேற்று ஸ்டான்லி வீதியிலுள்ள அதன் காரியாலயத்தில் நடைபெற்றது. சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கஊழியர்களின் பிரச்னைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

முதல்நடவடிக்கையாக எதிர்வரும் புதன்கிழமை (9-ம் திகதி) வடபிராந்தியத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 5க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளும ஊர்வலம் ஒன்றை நடத்துவதென்றும் அன்றைய தினம் கூட்டுறவுக் காரியாலயத்தின் முன்பும் அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் சத்தியாக்கிரகம் நடத்துவதென்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

# கீரிமலையில் ஜி. ஜி.யின் அஸ்தி கரைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஸ்தியின் ஒருபகுதி நேற்றுக்காலை நடந்த அந்தியேட்டிக்கிரியைகளின் பின்னர் கீரிமலை கடலுக்கு ஜி. ஜி.யின் மகனை திரு. குமார் பொன்னம்பலத்தினால் வெள்ளிப் பேழையில் எடுத்துச் செல்லப்பட்டு கரைக்கப்பட்டுநண்பகல் 12-10 மணிக்கு நீரில் சங்கமமாகியது.

நேற்றுக்காலை 9-30மணிக்கு கீரிமலை கடற்கரையில் அமைக்கப்கட்டபந்தலில்அந்தியேட்டி கிரிகைகள் ஆரம்பமானது. ஜி. ஜி. யின்உருவப்படம் ஊர்வலமாக பந்தலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்வலத்தில் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். சிவசிதம்பரம், நிருவாகச் செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை, திரு. ஆர். விஸ்வநாதன், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி மற்றும் உறவினர்கள், ஆதரவாளர்கள் சென்றனர். திரு. குமார் பொன்னம்பலம் அஸ்தி தாங்கிய கலசத்தைத் தோளில் கொண்டு சென்றார்.

விசேஷபந்தலில் கிரியைகளை சிவஸ்ரீ ச. பாலகிருஷ்ணக்குருக்கள், சிவஸ்ரீ சி.வரதராசசர்மா உயர்திரு. கை. திருஞானசம்பந்தக்குருக்கள், உயர்திரு. கை. நவசிவாயக்குருக்கள் உயர்திரு. க. வேதாரணியக் குருக்கள் நடத்தினார்கள்.

தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் வாழ்க்கை வரலாறு தொடர்பான பத்துக்கு மேற்பட்ட இரங்கற் பாக்கள் வெளியிடப்பட்டன. 'தமிழன் தலைமகன் ஜி. ஜி. என்ற மலரை புத்தொளி ந. சிவபாதம் வெளியிட்டிருந்தார்.

இங்கு வெளியிடப்பட்ட இரங்கற்பாக்களை இசைப்புலவர் சி. செல்லத்துரை, பந்தலில் அமர்ந்து உருக்கமாகப் பாடினார். திரு. இலங்கையர் செல்லையா பக்திப்பாடல்கள் பாடினார்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், தமிழர் கூட்டணி யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி வி. யோகேஸ்வரன், கூட்டணி ஸ்தாபக உறிப்பினர் திரு.கே. ஞானமூர்த்தி, முன்னாள் செனட்டர் எஸ். நடராசா, பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராஜா, கூட்டணி உறுப்பினர்களான திரு. ஆ. துரைராஜசிங்கம், க. முருகரத்தினம், திரு. தம்புத்தையா மற்றும் முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர்களான திரு. ரி. கே. இராசரத்தினம், டாக்டர் ஏப்பிரகாம், இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. கே. சிவதாசன், திரு. எஸ். செந்திவேல், திரு. எஸ். லோகேஸ்வரன் மற்றும் பலர் கிரியைகள் நடைபெற்ற சமயம் கலந்துகொண்டனர்.

மூதூர் நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன், கொழும்பு நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் மற்றும் சட்டத்தரணிகளும் கலந்துகொண்டனர். பருத்தித்துறையிலிருந்து ஆதரவாளர்கள் வானில் வந்திருந்தனர்.

அந்தியேட்டிக்கிரியைகள் முடிந்ததைத் தொடர்ந்து திரு. குமார் பொன்னம்பலம், அஸ்திக்கலசத்தை தோளில் சுமந்துசென்று கல்லுப்போட்டு அஸ்தியை புனிதநீரில் கரைத்தார்.

இதன்பின்னர் ஜி. ஜி.யின் உருவப்படம் ஊர்வலமாக கீரிமலை சிவன் கோவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு விசேட வழிபாடு இடம்பெற்றது. (க)

## சினிமாத்தயாரிப்பாளர்களுக்கு!

தரமான தமிழ்ப்படம் இலங்கையில் தயாரிப்பவர்களுக்கும், தயாரிக்க விரும்புபவர்களுக்கும் கதைகள் கதைவசனங்கள் அமைத்துக்கொடுக்கலாம். தொடர்பு கொள்ளவும்.

R. மதியழகன்,
312, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

5574



## "வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க!"



மில்க்வைற்
நீல சோப்
மேலுறைகள் 10
அனுப்பி
"திருக்குறள்
மணிகள்"
என்ற சிறந்த நூலைப்
பெற்றுக்
கொள்ளுங்கள்.

**மில்க்வைற்சவர்க்காரத்தொழிலகம்**

த. பெ. எண்-77, யாழ்ப்பாணம்.

5603



சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)
சுன்னாகம்

## வெற்றிடம்

### கட்டிட தொழில் மேற்பார்வையாளர் பதவி
(நிரந்தரம்)

மேற் குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வசிப்பிடத் தகமைகள்: குறைந்தளவு இரண்டு வருடமாவது யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராகஇருத்தல்வேண்டும்.

2. வயது: (22/3/77ல்) - 18க்கும் 35க்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது).

3. சம்பளம்: 180/.........320/- (மேலதிகமாக ............ ......... நடைமுறையி 8 X 10, 10 X 6 லுள்ள படிகளும் வழங்கப்படும்)

கல்வித்தராதரம்:

தமிழ்பாஷை, தூய கணிதம், பௌதிகவியல் உட்பட ஆறு பாடங்களில் கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சாதாரண) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கனிஷ்டதொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் எந்திரவியல்) பரீட்சை பூர்த்திசெய்துள்ளதுடன், கட்டிட மேற்பார்வையாளர்பதவியில் 5வருட அநுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் நிர்மாண எந்திரவியல்பயிற்சிநெறியில் சகலபகுதிகளிலும் பூரணசித்தியடைந்திருப்பதுடன்கட்டிடமேற்பார்வையாளர் பதவியில் ஐந்து வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியில் மாநகர எந்திரவியல் பயிற்சி நெறியில் சகல பகுதிகளிலும் பூரண சித்தியடைந்திருப்பதுடன் கட்டிட மேற்பார்வையாளர் பதவியில் ஐந்துவருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 22-3-1977.

விண்ணப்பங்கள் யாவும் இதற்கெனக் கூட்டுறவுச்சங்கத்தினால் வினியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, "பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம், சுன்னாகம்" என்கின்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சகல விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் ரூபா 1/-க்கான தபால்கட்டளை அல்லது காசுக்கட்டளையுடன் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடித உறையும் அனுப்பி தபாலிலோ அல்லது நேரிலோ பெற்றுக் கொள்ளலாம். காசுக்கட்டளைகள் அல்லது தபால் கட்டளைகள் யாவும் "சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்.

பொதுமுகாமையாளர்

5617


### விற்பனைக்கு

மானிப்பாய் மேற்கு விஜய சிங்களப் பாடசாலை டியூட்டறி தளபாடங்கள் மலிவாக விற்கப்படும். விபரங்களுக்கு: மேற்படி டியூட்டரியுடன் தொடர்பு கொள்க. 5606

பரந்தன் முல்லைத்தீவு ரோட்டில் 10-ம் கட்டை சுண்டிக்குளத்தில் (விசுவமடுவிற்கு அண்மையில்) 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 5581, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5581

## 'மனிதனும் மிருகமும்' கொழும்பு போகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க ஊழியர் கலாமன்றத்தினரின் தயாரிப்பான 'மனிதனும் மிருகமும்' என்னும் நவீன நாடகம், அகில இலங்கைக் கலாசாரப் பேரவைத் தமிழ் நாடகக் குழுவினரால் கொழும்பில் நடாத்தப்படவிருக்கும் தேசிய நாடக விழாவில் மேடையேற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் கதை, வசனத்தை வி. எம். குகராஜ எழுதி நெறிப்படுத்தியுள்ளார். இவ்விழாவில் பங்குபற்றும் சிறந்த நாடகத்திற்கும், கலைஞர்களுக்கும் சிறந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அகில இலங்கையிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து தமிழ் நாடகங்களுள் இதுவும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## வட்டு எம்.பிக்கு பாராட்டுவிழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

வட்டுக்கோட்டைத்தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராஜாவின் சேவையைப் பாராட்டி காரைநகர் வாலிப முன்னணியினர் கூட்டமொன்றை இன்று மாலை நடத்தவுள்ளனர்

காரைநகர் வாரிவளவு திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் வி. பொன்னம்பலம், எம்.சி. சுப்பிரமணியம், நாவேந்தன், மாதகல் வ.கந்தசாமி உட்படப் பலர் உரையாற்றுவார்கள். (அ)

# சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

பரந்தன் புதுக்குடியிருப்பு ரோட்டில் தேவிபுரம் மத்திய வகுப்புக் காணி 10 ஏக்கர் நல்ல வருமானம் உள்ள காணி தென்னைகள், மாமரங்கள், பலாமரங்கள், கிணறு நல்ல தண்ணீர் உண்டு. கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 5587, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம் 5587

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன் காரைநகர்-யாழ்ப்பாணம் வீதியில் 3½ பரப்பு, தென்னை, மா, கிணறு உடைய காணியும், நவாலியில் 17 பரப்பு பனை வளவும் விற்பனைக்கு உண்டு. கடித மூலம் தொடர்புகொள்க. விளம்பர இல. 5609 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5609

பளை புகையிரத நிலையத்துக்கு அருகில் 89 பரப்பு தென்னந்தோட்டம் கிணறு, குடியிருப்பு வசதிகளுடன் விற்பனைக்குண்டு. பயிர்ச்செய்கைகளுக்குஉகந்தகாணி. தொடர்பு கொள்க: S. கந்தசாமி, J. P. சட்டத்தரணி, சாவகச்சேரி. 5614

EN 8506. நல்ல நிலைமையிலுள்ள போட் கொன்சல் மார்க் II பாவிக்கப்படாத Baby Belling Electric Cooker 2 Rings, 1 over விற்பனைக்குண்டு. இன்று ஞாயிற்றுக்கிழமை பார்வையிடலாம். 134, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். 5621

கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை இலக்கம் 7/1 (19/1) 20 பரப்புக் காணிநிலம், கேள்விகள் முழுக் காணிக்கோ அல்லது சிறுபகுதிகட்கோ கவனிக்கப்படும். விண்ணப்பிக்கவும். சு. ஐயாத்துரை, 113, அத்தியடி, யாழ்ப்பாணம். 5619

### தேவை

தமிழ், சிங்களம் ஆங்கிலம் பேசக்கூடிய காசாளர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருத்தல்வேண்டும். மாலை 5 மணியில் இருந்து 8 மணிவரை தொடர்புகொள்ளவும் நியூ டில்கா 202 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5608

கண்ணாடித் தொழிற்சாலைக்கு மழுப்புவர்கள் (Fusers) தேவை. திறமைக்கேற்றஊதியம் வழங்கப்படும். உடன் நேரில்வரவும். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 5611

பிறநாட்டவர்கட்கு சதாகம், பலன் எழுதத் தெரிந்தவர்கள் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5616 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5616

யாழ்ப்பாண பட்டினத்திலிருந்து ஒன்றரை மைல் சுற்றளவுக்குள் 2 அல்லது 3 படுக்கை அறைகள் கொண்ட வீடு அல்லது ஒரு பகுதி வீடு தேவை. விபரங்களுக்கு:- விளம்பர இல 5618, C/o 'ஈழநாடு லிமிட்,' யாழ்ப்பாணம். 5618

### கல்வி

G. C. E. (O.L), G. C. E. (A. L), H. N. C. E., கலை, விஞ்ஞானம் வர்த்தகம், இரசாயனம், பௌதிகம், தாவரம், விலங்கியல் முதலிய பாடங்களுக்குச் செய்கை முறைப் பயிற்சி (Pratical) அளிக்கப்படும். தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறும். உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை. 5585

G. A. Q., G. S. Q. ,B. A வகுப்புகள் சட்டக்கல்விப் பட்டப்படிப்பு முதல் பரீட்சை (L. L. B.) வகுப்புகள் படம் வரைபயில்வோர் (Draugtsmanship) வகுப்புகள் விபரங்களுக்கு: பதிவாளர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 5584

### காணவில்லை

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த அ. வீரகத்தி என்பவரைக் 2-3-77 முதல் காணவில்லை. 75 வயது மதிக்கத்தக்கவர் சுமார் 5 1/2 அடி உயரம். கறுப்பு நிறம், மெல்லிய தோற்றம். இவரைக் கண்டவர்கள் தயவுசெய்துஅருகாமையில் உள்ள பொலிசில் அறிவிக்கவும். அறிவிப்பவர்: அ. இராமநாதி ஆசாரி, 4-ம் வட்டாரம், புங்குடுதீவு. 5620

### வகுப்புகள்

ஹோமியோபதி டாக்டர்களாகப் பதிவுபெற பயிற்சி வகுப்புகள் 20-3-77 ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ். ஹோமியோபதி வைத்திய சாலையில் ஆரம்பமாகிறது. விபரங்களுக்கு:- டாக்டர் தி. பரமசிவம் D.M.S., வல்வெட்டித்துறை. 5615

## சீமெந்துத் தொழிற்சாலை வளவில் ஜி. ஜி.க்கு வெண்கலச் சிலை

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வளவினுள் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு சுமார் 25 ஆயிரம் ரூபா செலவில் சிலைஒன்று எழுப்பப்படவிருக்கிறது.

காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை அமைவதற்கு மூலகாரணமாக இருந்த தமிழ்த்தலைவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்குதொழிற்சாலை வளவினுள் சிலைஅமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலைதொழிலாளர்களிடமிருந்து நிதிசேகரித்து 6 அடி உயரமான வெண்கலச் சிலைஒன்றைநிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை நிர்வாகத்திடம் சிலை அமைப்பதற்கான அனுமதியை விரைவில் பெற்று அமைப்பு வேலைகள் ஆரம்பமாகஉள்ளன.

மேற்படி சிலை அமைப்புக்குழு உறுப்பினர்கள் வருமாறு:

தலைவர்: திரு. எஸ். துரைசிங்கம் (பிரதம சூனியாளர்). காரியதரிசி: திரு. நா. நடராசா (மின்சாரப்பகுதி), தனாதிகாரி: திரு, அமிர்தலிங்கம் (சிவில் பகுதி அதிபர்).

6 பேர் கொண்ட குழுவும் தெரிவானது.


## கொப்பரு விற்பனையாளர்களுக்கு!

எமது இடத்தில் வைத்து ஒரு பாரம் (5 அந்தர்) 800/-படி நம்பர் 1 (A grade) கொப்பரு கொள்வனவு செய்கின்றோம். மற்றும் 2-ம் நம்பர் கொப்பருக்களை 1-ம் நம்பரிலிருந்து 50/- 1பாரமும் 3-ம் நம்பர் கொப்பருக்களை 80/- 1பாரமும் கழித்துக் கொள்வனவுசெய்கின்றோம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

கொள்வனவு முகாமையாளர்

சி. எஸ். கே. ஸ்தாபனம்

யாழ்ப்பாணம்.

5575

## நாடகம்

# சிட்டுக்குருவியும் பருந்தும்

## சிட்டுக்குருவியும் பருந்தும்

(முன்னுரை)

1973-ம் ஆண்டில் இலங்கை வானொலியில் 'சிட்டுக் குருவியும் பருந்தும்' நாடகம் ஒலிபரப்பாயிற்று. 1974-ம் ஆண்டில் எனது எழுத்துப் பணியின் வெள்ளிவிழாக் கலையரங்கில் இது மேடை நாடகமாய் அரங்கேறிற்று.

### நாடகத்திலே பங்குகொண்டு நடித்தோர் விபரம்:

1. திரு. த. பஞ்சலிங்கம் (சுப்பிரமணியம்) — ஆசிரியர், பலாங்கொடை ம. வி.
2. திரு. செ. திருநாவுக்கரசு (இராஜரத்தினம்) — முன்னாள் மின்சாரப் பொறியியலாளர், 'குத்துவிளக்கு', 'பொன்மணி' திரைச்சித்திரங்களில் நடித்தவர்
3. திருமதி பவானி திருநாவுக்கரசு (லதா) — ஆங்கிலப் போதனாசிரியர் வித்தியாலங்காரவளாகம் 'பொன்மணி'-நடிகை
4. டாக்டர் பி. சுப்பிரமணியம் — கவிஞர், நரம்பியல் நிபுணர் (டாக்டர், சந்திரசேகரன்)
5. திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு (கனகம்மா) — 1976-ம் ஆண்டு சாகித்தியமண்டல நாடகப் போட்டியில் இரண்டாவது சிறந்த நடிகை விருது பெற்றவர்
6. திருமதி இ. சிவசுந்தரம் (இராசம்மா) — ஆசிரியை, கனகரத்தினம் ம. ம. வி.
7. திருமதி சி. கனகசபாபதி (புவனேஸ்வரி)
8. செல்வி சிவசுந்தரம் (இராசாத்தி)

இவர்களின் கலையுணர்வுக்கும், கைமாறுவேண்டாக் கட்டுப்பாட்டிற்கும் வணக்கம் கூறி இந்நாடகத்தை இவர்களுக்கே அன்புக் காணிக்கையாக்குகின்றேன்.

சொக்கன்

## சொக்கன்

### காட்சி-1

(கோவில் மணி ஓசை கேட்கிறது. இராசம்மா கோவிலுக்குப் போக அவசரமாகப் புறப்படுகிறாள். அவ்வேளையில் மாரிமுத்து அங்குவந்து வாசற்படலையைத் திறக்கிறாள்)

மாரி: இராசம்மா அக்கா... எங்கை கோயிலுக்கோ... நான் தான் முழுவிசளமாக்கும்...

இரா: மாரிமுத்துவே ...வா... வா... என்ன சங்கதி... கெதியாய்ச் சொல்லு...எனக்கு நேரமாச்சு. நல்லூரான்ரை மணி கேக்குது ... பத்துமணியாய் போச்சுது...

மாரி: கூப்பன் பச்சை இருந்தால் இரண்டு கொத்து கடனாய் வாங்க வந்தனான்... இருக்குமே...

இரா: ஓ ... இருக்குது ... பிள்ளை...பிள்ளை...

(புவனேஸ்வரி... என்னம்மா என்று உள்ளிருந்து குரல் கொடுக்கிறாள்...)

இரா: மாரிமுத்து மாமிக்கு இரண்டு கொத்து கூப்பன் பச்சை வேணுமாம்... குடுத்திட்டு உலையை வை. கிணத்தடி மரத்தாலை தேங்காய் விழுந்து சத்தம்கேட்டுது.

புவ: அதை எடுத்து இப்ப தான் உரிச்சனான் அம்மா...

இரா: அதை உடைச்சுத் திருவி வை... நான் கோயிலுக்குப் போயிட்டு, ஐஞ்சு நிமிசத்திலை திரும்பிவிடுவன். வரேக்கை காய்பிஞ்சு வாங்கிவாறன்...

புவ: அடுப்புப் போட்டிலை பேணிக்கை தேத்தண்ணி வைச்சு மூடியிருந்தன்; குடிக்கேல்லையே...

இரா: எல்லாம் கோயிலுக்குப் போய்விட்டு வந்துதான். அப்ப மாரிமுத்து, அரிசியை வாங்கிக்கொண்டுபோ... நான் வாறன்.

மாரி: சரி ... அக்கா நீ போயிட்டு வா...

புவ: வாருங்கோ மாமி. இப்பிடி இருங்கோ. அரிசி கொண்டு வாறன்.

மாரி. நல்லதுமோனை (முருகா என்று சொல்லியவண்ணம் திண்ணையில் இருக்கிறாள்)

புவ: (அரிசியைக்கொண்டு வந்து) இந்தாங்கோ மாமி... பெட்டியைப் பிடியுங்கோ.

மாரி: (அரிசியைவாங்கியபடி) எங்கையடி மேனை இராசாத்தியைக் காணேல்லை...வண்ணாத்திப்பூச்சிபோலை அங்கையும், இங்கையும் பறந்து திரியிறவள் அல்லே,

புவ: (சிரித்தபடி) மாமிக்குத் தெரியாதே? எங்கடை வண்ணாத்திப் பூச்சி பெரிசாயிட்டுதாம். அது ஐஞ்சாறு நாளைக்கு வெளியில வரமாட்டுதாம்.

மாரி: (மகிழ்ச்சியோடு) என்ன...என்ன ... இராசாத்தி பெரியபிள்ளை ஆயிட்டாளோ? என்ரை இளையவளோட்டை வயசல்லே. பன்னிரண்டு வயசு தானே. அதுக்குள்ளை ஆ...வீரி தான்! எப்பசாமத்தியச்சடங்கு வைச்சிருக்கிறியள், அப்ப எங்களுக்கெல்லாம் சாப்பாடு போடப்போறியள் எண்டு சொல்லு. இராசாத்தி, இராசாத்தி.

இரா: (அடுப்படிக்கு அருகிலிருந்த கொட்டிலில் இருந்தபடி கூச்சத்தோடு) ஓம்...

மாரி: கனநாளைக்குப் பிறகு உங்கடை வீட்டிலை மேளம் கேக்க வைக்கப்போறாய்! என்ன?

புவ: அப்படி ஒண்டும் செய்யிற நோக்கமில்லை...மாமி, அதுக்கெல்லாம் வழிவேண்டாமே?

மாரி: இதுக்கெல்லாம் தானாய் வழிபிறக்கும் உன்ரை அம்மா அடிச்சுக் குடுக்கிற மனுசியெல்லே. ஆற்றை வீட்டை என்ன விசேசம் நடந்தாலும் நான் எண்டு முன்னுக்கு நிண்டு கருமம் செய்வா. எந்த வீட்டிலை சாமத்தியச் சடங்கு எண்டாலும், வேறை விசேசமெண்டாலும் ஐஞ்சுபத்து எப்பாடுபட்டும் குடுக்கிறது.

புவ: சும்மா போங்க மாமி. குடுக்கிறதெல்லாம் வாங்குறதுக்குத்தானே?

மாரி: பிள்ளை, உனக்கு உலக அனுபவம் போதாது. சாமத்திய வீடுகளிலை, கலியாண வீடுகளிலை கொப்பி வைச்சுக் குடுக்கிற காசெல்லாம் எழுதிவைக்கிறது உனக்குத்தெரியாதே? இதெல்லாம் ஒரு கடன்தான்.

(இதைக் கேட்டுக் கொண்டு சுப்பிரமணியம்வருகிறான்)

சுப்பு: அந்தக்கடன்தான் எங்களுக்கு வேண்டாம் எண்ணுறன்...

மாரி: ஓ...சுப்புவே? வாடா அப்பு...வா. உன்ரை தங்கச்சியின்ரை சடங்கைப்பற்றித் தான் பேசுறம்.

சுப்பு: அதுதான் நானும் சொல்லிறன். நாங்க உந்தக் கூடபுடலெல்லாம் செய்யப் போறதில்லை ... சாமத்தியச் சடங்குவைக்கிறதும், அந்தச் சாட்டிலை ஊராரிட்டைப் பணம்கைநீட்டிவாங்கிறதும்... சீ...சீ பெரிய அநாகரிய வழக்கம். உலகத்திலை வேறு சாதியொண்டும் செய்யாத காட்டுமிராண்டிப் பழக்கம். இந்தச் சாமத்தியச்சடங்கு.

மாரி: (சற்றுக்கோபத்துடன்) நாலு எழுத்துப்படிச்சிட்டியள் அல்லே: எங்கடை பழக்க வழக்கமெல்லாம் உங்களுக்குக் காட்டுமிராண்டித்தனமாய்த் தெரியுது. என்ன?

புவ: இதிலை ஏன் தர்க்கம். மாமி...ஊரரரிட்டைக் கை நீட்டி ஐஞ்சு பத்தை வாங்கிக்கிட்டு ஐநூறு ஆயிரம் எண்டு சிலவழிச்சுக்கடனாளிகள் ஆகிறதிலை என்ன லாபம்? காதும் காதும் வைச்சாப்போலை வாற புதன்கிழமை இராசாத்திக்குத் தோயவார்க்கிறதெண்டு இருக்கிறம். அம்மாவும் அப்பிடித் தான் சொன்னவ.

மாரி: (பெருமூச்சுவிட்டு) என்னவோ மேனை, வடிவாய் யோசிச்சுச் செய்யுங்கோ. வைரமுத்தண்ணையும் போனபிறகு உங்கடை விசயங்களெல்லாம் இப்படித்தான் இருக்குது. ஊரார் உலகத்தார் நெழிக்கப்பழிக்க நடவாதையுங்கோ. நான் வாறன்.

(போகிறாள்)

சுப்பு: (வெறுப்புடன்) ஊர் உலகம்...எல்லாம் ஏமாற்று... வெளிப்பகட்டு...

புவ: ஏன்ரா தம்பி? வந்த நேரத்திலையிருந்து எரிஞ்சுபுகையிறாய்,போ...போய்முகத்தைக் கழுவிட்டு வா ... தோசை காலமைதொடக்கம் கிடந்து காயுது.

சுப்பு: எனக்குச் சாப்பாடு வேண்டாம். ஒரு மண்ணும் வேண்டாம் போ...

புவ: வெள்ளிக்கிழமையும் அதுவுமாய்...இதென்ன அபசகுனம்மாதிரி...உனக்கு என்ன நடந்துட்டுது.

சுப்பு: என்னநடந்துட்டுது... இனி என்ன நடக்கவேணும்... இருபத்துமூன்று வயது மல்லனாய்ப் போயிட்டன். என்னாலை ஆருக்குப் பிரயோசனம்! நீயும் அம்மாவும் இரத்தம் பிழிஞ்சு தோட்டம் செய்து, ஆடு வளர்த்து, மாடு வளர்த்து சம்பாதிக்க இருந்து தின்னுறன் பார்...அக்கா ... எனக்கு வாழ்வே வெறுத்திட்டுது.

புவ: (குரல் தளதளக்க)எல்லாம் அந்தந்தக்காலத்திலை நடக்கவேண்டியது நடந்தேதீரும். நாங்கள் ஆருக்கும் எந்தத் தீமையும் செய்யேல்லை..கடவுள் எங்களைக் கைவிடமாட்டார். எழும்பு தம்பி...

சுப்பு: நீயும்...அம்மா மாதிரி வேதாந்தம் பேசத் தொடங்கிவிட்டாய். என்ன... இருபத்தெட்டு வயசிலை கன்னிப் பெண்ணாய் வீட்டு மூலையிலை உன்னை இருத்திவிட்டு, நான் பி. ஏ. பட்டத்துடன் வேலை தேடி நாய் மாதிரி அலைஞ்சு கொண்டு திரியிறன்...போதும் போதாதற்கு இராசாத்தியும் மூலையிலை இருந்திட்டாள்.

புவ: உஸ்... அவளுக்குக் கேட்கப் பேசாதை... அவள் குழந்தை. எங்கடை கஷ்டம் எங்களோடை... இருந்துட்டுப் போகட்டும். அந்தச் சின்னஞ்சிறிசை நாங்கள் வருத்தக் கூடாது. போ... போய் கால் முகம் கழுவிக்கொண்டு வா...

[சைக்கிள் மணி அடிக்கிறது]

புவ: தம்பி... காயிதம் போலைஇருக்கு போய்வாங்கு...

சுப்பு: சரி... அக்கா.

[காகிதம்வாங்கிவருகிறான்... வாசித்தபடி பல்லை நெருமுகிறான்... ஏளனச்சிரிப்பு சிரிக்கிறான்]

புவ: உது ஆற்றை காயிதம்...

சுப்பு: வேறு ஆற்றை... எங்கள் அருமை அண்ணை செல்வச் சிரஞ்சீவி ஸ்ரீ ஸ்ரீ... இராசரத்தினம் அவர்களுடைய முடங்கல்தான்.

புவ: அண்ணை எழுதினதோ... (ஆவலோடு) என்ன எழுதியிருக்கிறார்...

இராசா: [உள்ளேயிருந்தபடி] பெரியண்ணையின்ரை காயிதமோ... சின்னண்ணை... அதை எனக்கும் கேக்க வாசியுங்கோ...

சுப்பு: [பல்லை நெருமியபடி] பெரிய அண்ணை...

புவ: காயிதத்தை என்னட்டைத் தரப்போறியோ... நீ வாசிக்கப்போறியோ...

சுப்பு- இந்தா... நீயே வாசி... உன்ரை அண்ணையின்றை திருமுகத்தை...

[புவனம் வாங்கி வாசிக்கிறாள்... உள்ளிருந்து இராசாத்தி... உரத்து வாசியுங்கோ அக்கா... என்று குரல் எழுப்புகிறாள்]

புவ: உஸ் ... இரைச்சல் போடாதை... நாங்கள் உங்கையே வாறம்...

[இருவரும் இராசாத்தியின் கொட்டிலுக்குப் போகிறார்கள்]

புவ: இந்தா இராசாத்தி... நீயே வாசி... நாங்களும் கேட்கிறம்...

இராசா: சரி... அக்கா. [வாசிக்கிறாள்]

13, லோவர் வீதி,
பதுளை
15-3-69.

நல்லூர்க்கந்தன் கிருபையை முன்னிட்டு வாழும் அம்மா, தங்கை புவனேஸ், தம்பி சுப்பு, சின்னத்தங்கை இராசாத்தி யாவருக்கும்...

நலம். உங்கள் கடிதம் கிடைத்தது. இராசாத்தி பெரியபிள்ளையாகிட்டாள் என்ற செய்தியை அறிந்து மகிழ்ந்தோம்.

சுப்பு; மகிழ்ந்தினமா... அடடா...எவ்வளவு கரிசனை...

புவ: தம்பி கொஞ்சம் பேசாமல் இரு... நீ வாசி இராசாத்தி......

ஆனால், இதுபற்றி எனக்கு நீங்கள் அறிவிக்கவேண்டிய அவசியம் என்ன... என்றைக்கு என்விருப்பப்படி நான்லதாவை விவாகம் செய்ய நீங்கள் தடையாயிருந்தீர்களோ அன்றைக்கே உங்களுக்கும், எனக்கும் உறவு விட்டுப்போய்விட்டது. உலகத்திற்காக நான் உங்களோடு உறவு முறை கொண்டாடினாலும் உள்ளத்தால் நீங்கள் யாரோ... நான் யாரோ...எனது உலகம்,நான், என்மனைவி, என் குழந்தை என்றசிறிய வட்டத்துள் அடங்கி விட்டது. அதற்கு அப்பால் ஒன்றுமேயில்லை.

(புவனம் விம்முகிறாள்]

சுப்பு: அக்கா... ஏன் அழுகிறாய்... இராசாத்தி... நீ மேலே வாசி...

இரா: [வாசிக்கிறாள்] இராசாத்தியைச் சாட்டி ஏதாவது என்னிடம் எதிர்பார்த்தீர்களானால்... அது ஏமாற்றம் தான். என்னையே வேண்டாம்; என் பணம் மட்டும் வேண்டுமோ?

சுப்பு: ரஸ்கல்... மடையன் எதையும் பணத்தாலேயே அளக்கத் தொடங்கியிருக்கிறான்...

இரா: தொடர்ந்து வாசிக்கவா... கடிதத்தை கிழித்தெறியவா...

சுப்பு; அதை ஏன் கிழிப்பான்... அந்தப் பரதேசியைக் கிழித்தெறிந்தாலல்லவா என் கோபம் ஆறும்...

புவ: நீ வாசி... இராசாத்தி... (தொடரும்)




## பணம்

— எஸ். பி. கே. —

தொழிலாளி உழைக்கிறான்
செலவாளி அழிக்கிறான்
செல்வன் பெருக்குகிறான்
பெண் செலவழிக்கிறாள்
சேமிப்பவன் சாக்கிறான்
சாகிறவன் விட்டுப்
போகிறான்
சூதாடி இழக்கிறான்
வரியாளன் எடுக்கிறான்
வங்கியாளன் கொடுக்கிறான்
கள்ளன் பறிக்கிறான்
கயவன் ஏமாற்றுகிறான்
இழப்பவன் இரக்கிறான்
நான் அதைப்
பயன்படுத்துகிறேன்.

(றிச்சாட் ஆமரின் ஆங்கிலக் கவிதையின் தழுவல்)

## கலையுலகத் தொடர்புகள்— 12

# எம். ஜி. ஆர். வந்து இறங்கும் வரை சந்தேகம்!

கண்டனிலிருந்து பணம் செலுத்தி விடுபட்ட கதையை எழுதப்போனல் எம்.ஜி.ஆர்–சரோஜாதேவி இலங்கைக்கு வந்தமையை எழுத இடம் போதாமல் போய்விடும். ஆகையால்அதை டங்கள்கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

எம். ஜி. ஆர்.– சரோஜாதவி இருவரும் இலங்கைக்கு வருவது நிச்சயமாகி விட்டதனல் நானும் இலங்கை திரும்பி விட்டேன். இலங்கைவந்ததும் எம். ஜி. ஆரை வரவழைக்க விருந்த பத்திரிகை நிறுவனம் எம். ஜி. ஆரின் சம்மதக் கடிதத்தைக் கேட்டார்கள். விரைவில்வந்துவிடுமென்று சரோஜாதேவியின் கடிதத்தைக் காட்டினேன். அவர்களுக்கு இதுஎதிர்பாராத செய்தி. உடனே எம். ஜி. ஆருடன் சரோஜாதேவி ஆசிரியரிடமும் கலந்தாலோசிப்பதுபோல் காட்டிக்கொண்டார். எதுவானாலும் பண விஷயமல்லவா. அப்பத்திரிகையில் நிர்வாகக்குழு சிலரை நியமித்திருந்தது. அவர்கள் இடைக்கிடையே வந்துபிழை–சரி பார்த்துக்கொண்டார்கள் இதில் முக்கியமான விஷயம், மயில்வாகனன் அழைப்பதால் தான் எம். ஜி. ஆர். வருகிறார் என்றதும் அதுபலருக்குபெரும் வேதனையாகவும் வயிற்றெரிச்சலாகவும் இருந்தது.

''என் குடும்ப நண்பர் எம். ஜி. ஆர். நான் அழைக்கக்கூட வராமல் மயில்வாகனன் அழைக்க ஒப்புக் கொண்டு விட்டாரே!''என்ருர் ஒருவர். அதனல் மணித்தியாலக் கணக்கில் டெலிபோனில் எம். ஜி. ஆரோடு பேசியவரும் உண்டு.

**எஸ். பி. மயில்வாகனன்**

யும் வருகிருர் என்ற செய்தியைப் பிரசுரித்தனர். இதையடுத்து எம். ஜி. ஆர். அனுப்பிய கடிதம் கிடைத்ததும் அதையும் பிரசுரித்தார்கள். இக்கடிதங்கள் எல்லாம் என் சொந்தப்பெயருக்கே எழுதப்பட்டவையானதால் என் பெயரை ஒதுக்கிவிட்டு மற்றவற்றை பிரசுரித்தனர். நான் இதைப் பெரிதாக்கிக்கொள்ளவில்லை. உண்மையிலேயே பணம் செலவழிப்பவர்கள் அவர்கள்.

இனி எம். ஜி. ஆர். எங்கு எங்கெங்கெல்லாம் போவது,என்னஎன்னநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது? இவற்றை விளம்பரப் பகுதி நிர்வாகஸ்தர் திரு. ஜய சிங்கா தான் விருப்பிய படியே நிர்ணயிக்க ஆரம்பித்தார். ஆனல் அவர் பிரதம அவர்கள் எல்லாம் ஒன்று கூடி இதனல் எனக்கு ஏதோ ''கிம்பளம்'' உண்டு என்று வதந்தியையும் கிளப்பி விட்டனர். எம். ஜி. ஆருக்கு மொட்டைக் கடிதம் எழுதியவர்களும் உண்டு. இவர்கள் இந்தத் திருவிளையாடல்களைச்செய்து கொண்டிருக்கும் பொழுது பத்திரிகை நிறுவனம்எம். ஜி. ஆர்–சரோஜாதேவி எங்கு போவது, எந்தெந்தநிகழ்ச்சிகளில்கலந்து கொள்வது என்பதை எல்லாம் நிர்ணயித்துக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஒருவர் 'விசாவுக்கு விண்ணப்பித்து வீட்டீர்களா' என்ருர்.

### எம். ஜி. ஆருக்கு நிபந்தனை

எம். ஜி. ஆரை வரவழைக்கும் பத்திரிகை நிறுவனம் அந்தச் சமயம் இருந்த அரசாங்கத்திற்கு நன்ருக ஆதரவு கொடுத்துவந்ததால் அதைப் பற்றிய பிரச்னையில்லையென்று கூறிவிட்டார்கள். ''இருந்தாலும் விசாரித்து வையுங்கள்: எம். ஜி. ஆர். உடைய கட்சி சிலருக்குப்பிடிக்காது'' என்று எச்சரிக்கை செய்து வைத்தேன். நான்சொன்னதுபோலவும் அவர்கள் எதிர்பாராததுபோலவும் எம். ஜி. ஆர். வருகைக்கு எதிர்ப்பும் இருக்கத்தான் செய்தது, அரசியல் ரீதியாக. விசாவிற்கு விண்ணப்பித்ததும் அவர்களுக்குக் கிடைத்த பதில் எதிர்பார்த்த அளவு திருப்தியைக் கொடுக்கவில்லை. விசா 4 நாட்களுக்கு மட்டும் அதோடு சிலநிபந்தனைகளும் விதித்திருந்தார்கள். இந்த விசா சென்னைக்குப் போனதும் எம். ஜி. ஆர்.நிபந்தனையை ரத்துச் செய்யும்படி கேட்டு தந்தியடித்தார். இல்லையேல் வருவது சந்தேகம் என்றும் குறிப்பிட்டிருந்தார். தந்திகிடைத்ததும் பிரதமஆசிரியரும் வேறு இதில் சம்பந்தப்பட்டவர்களும் என்னைத்தேடி வந்தார்கள். ''நீதான் டெலிபோனில் பேசி விளங்கப் படுத்து'' என்ருர்கள். பேசினேன், விளக்கம் கொடுத்தேன்! வந்ததும் நிபந்தனைகளை நீக்கிவிடவேண்டும் என்ருர் எம். ஜி. ஆர்.



இலங்கை விஜயத்தின்போது யாழ். நகரில் மக்கள் திலகம்.

''சரி'' என்று கூறியதும் அவர் வருவதற்கு சம்மதம் தெரிவித்தார்.

நாள் குறிப்பிட்டாயிற்று. எத்தனை பேர் வருவது? எத்தனை டிக்கட் அனுப்புவது?அவருடன் எத்தனைபேர்–சரோஜாதேவியுடன் எத்தனை பேர்? சரோஜாதேவியோடு தாய் தந்தையர் மட்டும்தான் என்று முடிவாயிற்று. எம். ஜி. ஆருடன் சுமார் 5 பேராவது வரக்கூடும். டிக்கட்டுகள் வாங்கி அனுப்பவேண்டும். பெயர்பட்டியல் இவை எல்லாம்வந்ததும் 'டிக்கட்'டுகள் அனுப்பியதும் வரும் திகதி நிச்சயிக்கவேண்டும். இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பின்னும் எம். ஜி. ஆருக்கு விசா விஷயத்தில் திருப்தியில்லை. நிபந்தனைகளோடு விசா பெற்றுவருவது அவருக்கு மனத்திருப்தியைக் கொடுக்கவில்லை. இருந்தாலும் இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பின்பும் வராமல் விட்டுவிட்டால்! ஏனெனில் இப்படியானநிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றன, அதுவும் திருப்திகரமாக நடைபெறப்போகின்றன என்றதுமே சிலருக்குப்பிடிக்காது, அதில் அனுமதேயமாக தங்கள் கைங்கரியத்தைக் காட்டத்தான் செய்வார்கள்.

எம்.ஜி.ஆர். கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் ''மலைநாட்டு லட்சுமி'' தெரிவும் ஒன்று. இது ஒரு அழகுராணிப் போட்டி போன்றதுதான். ஆனல் முழுக்க முழுக்க மலைநாட்டு தோட்டத்துப் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளும் போட்டி. முதலாவது வரும் மலைநாட்டு லட்சுமிக்கும் மற்றும் பெண்களுக்கும் எம். ஜி. ஆர். பரிசு கொடுப்பதாக இருந்தது. இதையிட்டு ஒரு பிரச்னையைக் கிளப்பி இதற்காகவா எம். ஜி. ஆர். வருகிருர். வேறு நல்ல கைங்கரியத்துக்கு வரமுடியாதா! என்று லேசாக சறுக்கச் செய்தவர்களும் உண்டு. ஏதோ ஆரம்பம் நல்ல நாளில்ஆரம்பிக்கப்பட்டபடியினலோ என்னவோ எல்லாவித தடைகளையும் ஒதுக்கிவிட்டு எம். ஜி. ஆர். வருவது திண்ணம் என்பது அவர் அடித்திருந்த தந்தியிலிருந்து அறியககூடியதாக இருந்தது.

### ''Arrange Press Conference at Galle Face Hotel''.

வந்ததும் தான் நடத்தும் பத்திரிகையாளர் மகாநாட்டில் தன்னை வரவேண்டாம் என்றவர்களுக்கும், தன்னை அழைக்கும் பத்திரிகை ஏன் தன்னைவரவழைக்கிறது என்பதற்கும் மற்றும் மக்கள்மத்தியிலுள்ளசந்தேகங்களைத் தீர்த்து வைப்பதற்குமாக விளக்கம் கொடுக்கப் போவதாக புறப்படமுன் என்னுடன் டெலிபோனில் பேசும்பொழுது கூறினர் எம். ஜி. ஆர். இலங்கைக்கு வரும் நாள் குறிப்பிட்டாயிற்று. அன்றைய தினம் இரத்மலானை விமானநிலையத்தை அணுக முடியாதவண்ணம் ஜனக்கூட்டம். விமானம் வந்து இறங்கிற்று. எம். ஜி. ஆர். முகத்தைக் காணும்வரை எனக்குச் சந்தேகம்தான்.

## அவனியிலே ரயிலாக ஏன் பிறந்தேன்!

அப்பப்பா! மிகத்தொல்லை போதும் போதும்!
அவனியிலே 'ரயிலா'க ஏன் பிறந்தேன்?
தப்பப்பா! அடிக்கடி நீ சினிமாப் பார்த்தல்
தவிரப்பா எனத்தந்தை புத்தி சொன்னல்
'அப்பப்பா! இதுகொடுமை' என்பான் மைந்தன்
அவசரமாய் ஓடிவந்து என்மேல் வீழ்வான்!
இப்பப்பா ஒரு சேலை! என்பாள் இல்லாள்
இலையென்ருல் என்மேலே வீழ்ந்து மாய்வாள்!

காதலென்பார் அதுகூடா விட்டால் மெல்லக்
களவாக வந்தென்மேல் வீழ்ந்திறப்பார்!
மோதலிலே பொருள்பறிப்போர் தண்டவாள
முனையிணைக்கும் 'பிளேற்'றகற்றி விடுவார்வீழ்வேன்;
வேதனையில் நான்மெலிந்து ஓடும் போது
வேண்டுமென்றே 'பஸ்' ஒன்று வந்துமோதும்!
சோதனைபோல் என்னினமே என்னை மோதும்
துன்பமெலாந் தாங்குதற்கோ வலிமையில்லை!

எண்ணியதை முடிப்பதற்கு 'ஸ்ரைக்குச் செய்வோர்
எனையேதான் தேர்ந்தெடுப்பர் இதிலும்தொல்லை!
கண்ணியமாய் வாழவே தெரியாப் புல்லர்
களவெடுப்பர் என்னுடமை மூளியாவேன்!
விழிமூடி என்மக்கள் தூங்கும்போது
வேங்கையென அவர்மீது பாய்ந்து கள்வர்
பழிக்கஞ்சா தடிப்பார்கள் கொள்ளை! இந்தப்
பாதகத்தைக் காண்பதற்கோ நான் பிறந்தேன்!

—ஆனந்தி நடராசா

# நீதிமன்றங்களில் ஜி. ஜி. யின் சாகசங்க[ள்]

சட்டத்துறையிலே சாணக்கியனக விளங்கிய ஜி. ஜி. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டவர் எந்தக் கஷ்டமான வழக்கென்ருலும் சரி, வெற்றிபெறுவேன் என்ற நம்பிக்கையுடன்தான் வாதாடுவார். இந்தத் தன்னம்பிக்கைதான் வழக்குகளில் பல வெற்றிகளைத் தேடிக்கொடுத்தன.

லண்டனிலிருந்து சட்டத்துறையில் பட்டம்பெற்றுத் திரும்பியதும்ஊர்காவற்றுறை வழக்கொன்றில் ஜி.ஜி.ஆஜரானர். அப்பகுதியிலுள்ள கடற்ரெழிலாளர் மத்தியில்ஏற்பட்ட கிறிமினல் வழக்கு அது. அக்காலத்தில் வாட்டசாட்டமும் கம்பீரமுமான இளம் பொன்னம்பலம் ஆங்கிலத்தில் வெள்ளையரே மலைத்துநிற்கும் விதத்தில்வெளுத்துவாங்குவார். அப்பொழுது நீதிமன்றங்களில் பெரும்பாலும்வெள்ளையர்களே நீதிபதிகளாகக் கடமையாற்றினர்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலமானபடியால் நீதிமன்றங்களில் ஆங்கிலந்தான் முழுக்க முழுக்க ஆட்சிபுரிந்தது. இதுவும் ஜி.ஜி.யின் வெற்றிகளுக்கு ஒரு காரணம் எனக் கருதலாம்.

அந்தக் காலத்தில் நீதவான் இருநாட்கள்தான் யாழ்ப்பாணம் வருவது வழக்கம். அவர் ஒரு சிங்கள நீதவான். அவர் யாழ்ப்பாணம் வந்தால் அவரது நண்பர் கிளவ் பாலசிங்கம் வீட்டில்தான் இரு நாட்களும் தங்குவார். இந்த நீதவான் முன்னிலையில்தான் கடற்ரெழிலாளர் வழக்கில் ஜி. ஜி. ஆஜரானர். முதல் நாள் விசாரணை நடந்தது. ஜி. ஜி. யின் குறுக்குவிசாரணையிலும், சட்ட நுணுக்கங்களை எடுத்தாளும் விதத்திலும் ஆங்கில மொழியில் அவருக்குள்ள திறமையையும் பார்த்து நீதிபதியே அசந்துபோனர். அன்று மாலை நீதிபதி, கிளவ் பாலசிங்கத்திடம்ஜி.ஜி.யின் அபார திறமையைப் புகழ்ந்து எதிர்காலத்தில் சட்டத்துறையில் சிறந்துவிளங்கப்போகிருர் எனக் கூறினர். மறுநாள் கிளவ் பாலசிங்கமே நீதிமன்றம் சென்று ஜி.ஜி. யின் வாதங்களைக் கேட்டறிந்தபின் எப்படியும் ஜி.ஜி.யை தனது மைத்துனராக்கிவிடவேண்டுமென விரும்பினர். திருமணப் பேச்சுநடந்தது. அதன்பின்னரே ஜி. ஜிக்கு திருமணம் நடந்தது!

1931-ம் ஆண்டு கொழும்பில் ஒரு பிரபல கொலைவழக்கு

**கா. யோகநாதன்**

நடந்தது. அப்பொழுது கொலை வழக்குகளை விசாரணைசெய்ய அசைஸ் கமிஷனர்கள் நியமிக்கப்படுவார்கள். அச்சமயம் அசைஸ் கமிஷனராக ஏச்.ஏ. பி. சந்திரசேகரா நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கும், ஜி. ஜி.க்கும் ஒத்துவராது. எந்த வழக்கென்ருலும் சரி, சட்டப் பிரச்னையில் பலத்த வாக்குவாதம்; சொற்போர் நடக்கும்.

### தோட்டத்துரை வழக்கு

ஒரு வெள்ளைக்கார தோட்ட முதலாளி பட்டப்பகலில் தொட்டத்தொழிலாளி ஒருவரைகைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டதாகவழக்கு சாட்சிகள் பலமாக இருந்தன. வெள்ளைக்காரர் சார்பில் அப்போது பிரபல கிறிமினல் வழக்கறிஞர்களாக விளங்கிய எவரும் ஆஜராக முன்வரவில்லை. காரணம் அது ஒரு கஷ்டமான வழக்கு. இளம் பொன்னம்பலம் அவ்வழக்கில் ஆஜராக சம்மதித்தார். விசாரணை நடந்தது. நீதிமன்றம் எங்கும் ஒரே ஜனத்திரள். வழக்கறிஞர்களே தினமும் அங்கு படை எடுத்தார்கள். ஜி. ஜி.யின் வாதத்திறமையைக்கண்டு வாயடைத்துப் போனர்கள். விசாரணையின் போது நீதிபதிக்கும், ஜி.ஜிக்குமிடையில் பலத்த வாக்குவாதம் நடந்தது. கடைசியில் எதிரி விடுதலையானர். நாடெங்கும் அந்த வழக்கைப்பற்றியே பேச்சாக இருந்தது. இந்த வழக்குக்குப் பின்னரே சட்டத்துறையில் ஜி.ஜி. யின் ஆட்சி கொடிகட்டிப்பறக்க ஆரம்பித்தது.

இந்த வழக்கு வெற்றிக்குப் பின் ஜி. ஜி. யாழ்ப்பாணம் வந்தபோது பலத்தவரவேற்பு கிடைத்தது. இந்தவெற்றி அவரை அரசியல்துறையிலும் காலடி எடுத்துவைக்கச்செய்தது. சட்டத்துறையில் அவர் பெற்றுவந்த ஒவ்வொரு வெற்றியும் அரசியல்துறையில்அவர் முன்னேற்றத்திற்கு உதவி

நான் ...

பத் ...

## இப்படித்தான் இந்தியா சென்றேன்

# திரிகையாளன் என்றால்

் 35 நிமிட நேரம் மச் சுமந்து சென்ற திருச்சி சென்றடை ளும் பத்திரிகை வழங்கப்படுகின்ற தை அனுபவிக்கல

ந்திலிருந்து இறங்கி கப்பரிசோதனை, சுகா பரிசோதனை குடி இலாகா அதிகாரிக தனை போன்றவற் ன்றோம். எம்முடன் ல் வந்த அனைவரும் தனைகளையும் முடித் டு ஒவ்வொருவ வெளியே சென்று ந்தார்கள். நாமும் ன்று முதலாவது காக எமது பாஸ் அங்கு சமர்ப்பித் திரிகையாளர்களுக்கு டும் 'கௌரவம்' ன்து.

ர்னலிஸ்டா?' என்று காரி கேட்டுவிட்டு நேரம் அங்கிட்டு களா?' என்றார். ட்' என்று அறிந்த அதிகாரி கமக்குப் ருந்த உத்தியோகத் ஏதோ பேசிக் ர். எம்மை அவர் சாகப் பார்த்ததும் துமாக இருப்பதை உத்தியோகத்தர் சன்று தொலைபேசி ச் சுழற்றியதையும் தானிக்காமலில்லை. ஸ்ரேசனா?' என்று டுத் தமதுபேச்சைத் தார் அந்த அதிகாரி. லிருந்து 'ஜர்ன இருக்காங்க' என்று மறுபுறத்திலிருந்து சொல்லிமுடிந்ததும் ன் றிசீவரைவைத்து த அதிகாரி ஆசனத்துக்கு வந்தார்.

சில நிமிட நேரத்தில் அங்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அதே அதிகாரி அதற்குப் பதில் கொடுத்தார். எனது பெயர் விபரங்கள் அதில் கொடுபட்டது. மறுபுறத்திலிருந்து ஏதோ சொல்லவும் அப்படியா? நான் எடுக்கட்டுமா? என்று கேட்டுவிட்டு ஆசனத்துக்கு வந்த பிரஸ்தாப உத்தியோகத்தர் என்னை அழைத்து ''இந்தியாவில் எவ்வளவு காலம் தங்கியிருப்பீர்கள்'' என்றார்.

''சுமார் 2 வாரங்களில் திரும்பிவிடுவோம்'' என்றேன். தங்கள் பிரயாண நோக்கம் என்ன என்று கேட்டதும், ஈரானிலிருந்து பம்பாய்க்கு வந்துள்ள எனது தம்பியாரைச் சந்தித்துவிட்டு தமிழ் நாட்டில் முக்கிய சில ஸ்தலங்களைத் தரிசிப்போம், என்றேன்.

நீங்கள் நேரே இப்போது எங்கே போகிறீர்கள்?

திருச்சியில் ஒரு ஹோட்டலில் தங்குவோம். எந்த ஹோட்டலில்.- 'அசோக் பவன்' என்று சொல்லித் தந்துவிட்டார்கள். அந்த ஹோட்டல் எப்படியோ தெரியாது? சகலவசதிகளும் இங்குஇருக்குமா?-நான் வினவினேன்.

நீங்கள் முன்னரும் இங்கு வந்ததுண்டா?:

இல்லையே. இதுதான் முதற் தடவை!

''ஹோட்டலில் தங்கிவிட்டு, அடுத்து உங்கள் 'புரேகிரும்' என்ன?''

ஹோட்டலில் கொஞ்சம் ஆறுதல் எடுத்த பின்னர்தான் அடுத்த 'புரேகிரும்' தயாரிப்போம்.

எங்கு எங்கு போகத்திட்டமிட்டுள்ளீர்கள்?

ஸ்ரீரங்கம், மலைக்கோட்டைப் பிள்ளையார் மாயவரம் போன்ற ஸ்தலங்களுக்குச் செல்லுமாறு எமது நண்பர்கள் சொல்லிவிட்டார்கள்.

ஹோட்டலிலிருந்து திருச்சியை விட்டு எப்போது புறப்படுவீர்கள்?- 5-ம் திகதி சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனத்தைப் பார்க்கச் செல்வோம்.

பின்னர்...?

சிதம்பரத்துக்கு அருகிலுள்ள முக்கிய உல்லாசப் பிரயாண இடங்களைப் பார்வையிடுவோம்.

தஞ்சாவூர், கும்பகோணம் ஆலயங்களுக்கும் செல்வீர்களா?

ஆம்' இவைகளும் பக்கம் பக்கமாக இருந்தால் பார்த்துவிடுவோம்.

**எஸ். கே. காசி**

'பூம்புகார்' போவீர்களா?

'நிச்சயமாக.'

இவற்றை முடித்துக் கொண்டு அடுத்த திட்டம் என்ன?

திருச்சிக்குத் திரும்பிவந்து அறையைக் காலிசெய்துவிட்டு சென்னைக்குப் புறப்படுவோம்.

எப்போது புறப்படத் திட்டம்?

பெரும்பாலும் 8-ம், 9-ம் திகதி மட்டில்!

அங்கு எங்கு தங்குவீர்கள்?

சென்னையைப்பொறுத்தமட்டில் அங்கு சென்றபின்னர்தான் விசாரித்து நல்லஹோட்டல் ஒன்றில் தங்குவோம்.

அரசியல் தலைவர்கள் யாரையாவது சந்திக்க விரும்புகிறீர்களா?

''அந்தநோக்கம் இல்லை. ஏற்கனவே கொழும்பு இந்தியத் தூதுவராலயததுக்கு இது சம்பந்தமான உறுதிமொழியைக் கொடுத்துவிட்டோம்''.

''கலைஞர்களைக்கூடச் சந்திக்க விருப்பமில்லையா?''

''சந்திக்கமாட்டோம்.''

''சரி. சென்னையிலிருந்து எப்போது பம்பாய் புறப்படுவீர்கள்?

''நாம் இங்கு வந்துசேர்ந்துள்ளதுபற்றி எனது தம்பிக்கு தந்திமூலம் தகவல் கொடுப்போம். அவரிடமிருந்து பதில் கிடைப்பதைப்பொறுத்து பம்பாய்க்குத் தொடர்வோம்.',

# இத்தனை பயமா?

'தம்பியின் பம்பாய் விலாசம் என்ன?''

விலாசத்தை எழுதிக் கொண்ட அந்த அதிகாரி இந்தியாவில் வேறு யாரையும் தங்களுக்குத் தெரியாதா? என்றார்.

'சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நண்பர் ஒருவர் கல்வி பயில்கிறார்' என்றேன். அவரது விலாசத்தையும் எழுதிக்கொண்ட அவர் இந்தியர்கள் எவரையும் தங்களுக்குத் தெரியாதா? என்றார்.

''திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலையில் கடமையாற்றும் ஓர் அன்பர், இலங்கை வந்திருந்தபோது எமது பத்திரிகைக் காரியாலயத்துக்கு வந்திருந்தார்; அவரையும் சந்திக்க ஆசைகொண்டுள்ளோம்' என்றேன்.

அவரது பெயர் விலாசங்களையும் பதிவுசெய்துகொண்ட அந்த அதிகாரி எமக்கு நன்றி கூறிவிட்டுசுங்கப்பரிசோதனைக்காக அனுப்பிவைத்தார்.

வேற்று நாட்டுப் பத்திரிகைக்காரர்களென்றால் ஒற்றர்கள் என்று அங்கு நினைத்துவிடுகிறார்களா? என்றாலும் அவர்கள் பயப்படுவதில் நியாயமுமுண்டுதானே?

### சுங்கச் சோதனை

சுங்க அதிகாரி எமது பெயரை அழைத்து, எமது பெட்டிகளைக் கொண்டுவரும்படி கூறவே, அவற்றை அங்கு தூக்கி வைக்கிறோம்.

முன்னர் எத்தனை தடவை இங்கு வந்துள்ளீர்கள் என்று சிரித்துக்கொண்டே கேட்டார் அந்த அதிகாரி. இதுதான் முதல்தடவை என்று சொன்னதும், சிலோனில் எந்தப் பத்திரிகையில் கடமையாற்றுகிறீர்கள்? என்றார்.

'ஈழநாடு' என்றேன்- பாஸ்போர்ட்டில் எழுதப்பட்டிருப்பதை வாசித்துவிட்டு நீங்க 'சப்-எடிட்டரா' என்றார்.

'ஆம்' என்று தலையை அசைத்தபடி, ''நீங்க யாழ்ப்பாணம் வந்துள்ளீர்களா?'' என்றேன்.

''வரத்தான் விருப்பம்- சந்தர்ப்பம் கிடைக்கவில்லை' என்றார்.

இவ்வளவும் அவர் கேட்டுக் கொண்டு சும்மாயிருக்கவில்லை. எமது சூட்கேசுப் பெட்டியில் தனது நாட்டத்தை அவர் வைக்காமல் விடவில்லை. கையிலிருந்த 'கமராவை' வாங்கி, இது 'டிகிளயர்' பண்ணினீர்களா? என்றார்.

'ஆம்' என்றுவிட்டு பாஸ்போர்ட்டைக் கொடுத்தேன். அதில் கமராபற்றிய விபரங்கள் பதியப்பட்டிருந்தன. தாமும் அதில் ஒப்பமிட்டுவிட்டு 'சரி எல்லாவற்றையும் எடுங்கள்' என்றார்.

### தப்பினோம்

நாம் திருச்சி விமான நிலையத்தில் தரித்து நிற்கவேண்டி ஏற்பட்ட அந்தச்சொற்பநேரத்துக்குள் பலவித அனுபவங்கள் எமக்கு ஏற்பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சிலரின் 'சூட்கேசு'கள் வெட்டிக்கிழிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டன.

மலேயா நாட்டைச்சேர்ந்த ஒருவர் இலங்கை திரும்பும் வழியில் திருச்சி வந்திருந்தார். நீண்ட தாடியுடன் வேட்டி, கோர்ட் அணிந்து சால்வையால் தேகத்தை மூடியிருந்த அந்த அன்பர் தமது 'கோர்ட்'டுக்குள் மறைத்துவைத்திருந்த 'ஏதோ' ஒருபொருளைச் சுங்க அதிகாரிகள் மிகச் சுலபமாகப் பிடித்ததையும் நாம் கண்டோம்.

புத்தம் புதிய 7, 8 இலங்கை சேட்டுக்களை 'சீல்' உடைக்காமல் கொண்டுவந்திருந்த ஒருவருக்கு அதிக 'டியூட்டி' அடிக்கப்பட்டது.

நாம் அதிகமாக ஏதும் கொண்டுசெல்லவில்லை என்றாலும், பத்திரிகையாளன் என்பதற்காகவோ என்னவோ எமது சூட்கேசுகள் அவ்வளவு கடுமையாகச் சோதனை இடப்படவில்லை என்றுதான் சொல்லலாம்.

### பெண்மணியின் கண்டிப்பு

அங்கு கடமையிலிருந்த ஒரு பெண்மணி தமது கடமையை நேர்மையுடனும் கண்டிப்புடனும் செய்துகொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. அவரிடம் 'சிக்கிய' ஒருவராவது 'டியூட்டி' கட்டாமல் வெளியில் போனது கிடையாது.

160 ரூபாவுக்குக் குறைந்த மதிப்புள்ள பொருட்களைமட்டுமே இந்தியாவுக்குள் ஒருவர் கொண்டுசெல்லலாம். ஆனால் சில அதிகாரிகள் கொஞ்சம் பார்த்தும் பார்க்காமலும் விடுவதுண்டுதானே? ஆனால் இந்தப் பெண்மணியைப் பொறுத்தமட்டில் 'ஈன இரக்கம்' கிடையாதவர்போல் தமது கடமையைச் செய்துகொண்டிருந்ததை அந்தச் சொற்ப நேரத்துக்குள் அவதானிக்கமுடிந்தது.

'டியூட்டி' அடிக்கப்பட்டவர்கள் விமான நிலைய வெளியேறும் வாசலில் காத்துநிற்கும் சிலரிடம் பணத்தைவாங்கி டியூட்டிக்கான பணத்தைச் செலுத்துவதைக் கண்டேன். இவர்கள்பற்றி வேறு ஒரு சந்

(9-ம் பக்கம் பார்க்க)

---

# ...ள்

ந்தது. சட்டத்துறை ர் யாழ்ப்பாணத்தில் கியிராமல் இலங்கை முழுவதும் கவனம் னர். நாளடைவில் மட்டுமன்றி, தமிழ், மொழிகளிலும் வேக சக்கூடிய ஆற்றலைப் இது அவருக்கு சட் யில் மேலும் பல லைப்பெற உதவியது. லத்தீன், ஹிந்தி, ழிகள் உட்பட ஒன் ழிகளை இவர் நன்கு ந்தார்.

ம் ஆண்டில் யாழ்ப்பா வடபகுதிஅசைஸ்நீதி ாரணைஆரம்பமானது ழதெல்லாம் கொலை ில் வழக்கறிஞர் ஏச். தான் ஆஜராவார். து முதிர்ந்தவர்;அனு யாழ். நகரமண்ட ான் அசைஸ் விசா க்கும். வெள்ளைக்கார ந. கனன் என்பவர் தியரசராகப் பணி ர். அந்த விசாரணை து 19 வழக்குகள் . கொழும்பிலே க்காரத் தோட்டமுத ழக்கில் வெற்றிபெற்று ணம் வந்த ஜி. ஜியை க்குகளில் ஏற்படுத்தி திரு. ஏச். டி. தம்பு ஒரே ஒரு வழக்கு கிடைத்தது. திரு. டனே ஜி. ஜிக்கு ஒரு எழுதினர். ''வழக்க காலை வழக்குகளில் னே தான் ஆஜராகுவேன். இம்முறை 19 வழக்குகளில் 18 வழக்குகளை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஒரே ஒரு வழக்கில் மட்டும் என்னை ஏற்படுத்தியுள்ளார்கள். தயவுசெய்து அந்த ஒரேயொரு வழக்கையும் நீங்களே நடத்துங்கள், அந்த 'வழக்குப் பீசை' மட்டும் நான் எடுக்க சம்மதியுங்கள், என்று அக்கடிதத்தில் எழுதினர். ஜி. ஜி. அதனை ஏற்று அந்த வழக்கை முதுபெரும் வழக்கறிஞர் திரு. தம்புவுக்காக இலவசமாக ஆஜராகி, வெற்றிபெற்றுக்கொடுத்தார். 19 வழக்குகளிலும் ஜி. ஜி.யே ஆஜரானர். அதன்பின்னர் வடபகுதியில் அசைஸ் விசாரணை நடக்கும்போது பொரும்பாலான கொலை வழக்குகளில் ஜி. ஜி.யே ஆஜரானர்.

### மயிலிட்டி விஜயன் வழக்கு

மயிலிட்டி விஜயன் வழக்கு பிரபலமானது. 1941-ம் ஆண்டில் வடபகுதி அசைஸ் கோர்ட்டில் அவ்வழக்கு 2 மாதங்கள்வரை நடந்தது. எதிரிக்காக ஜி. ஜி. ஆஜராகியிருந்தார். பட்டப்பகலில் சுட்டுக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. சாட்சிகளும் அதிகம். ஜி. ஜி.யும் விடவில்லை. சளைக்காமல் குறுக்குவிசாரணை செய்து கொண்டேயிருந்தார். தினமும் விசாரணையைப் பார்ப்பதற்காக வடபகுதியில் பல இடங்களிலிருந்து மக்கள் திரண்டு நீதிமன்றம் வந்தார்கள்.

வெள்ளைக்கார நீதியரசர் முன்னிலையில்தான் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது. ஜூரி சபையிலும் கல்விமான்களே கடமையாற்றினார்கள். ஜூரிசபைத் தலைவராக பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி உப-அதிபர் வால்டன் கடமையாற்றினர். முழுவிசாரணையும் நடைபெற்று ஜூரி சபையினர் பலமணி நேரம் மந்திராலோசனை செய்தபின் எதிரி சுற்றவாளி என ஏகமனதாக தீர்ப்பளித்தனர். அந்த வழக்கில் ஜி. ஜி.க்கு கிடைத்தது பெரு வெற்றியாகும்.

(தொடரும்)

---

# இந்திய சுதந்திரபோரின் யுத்த பேரிகை வந்தேமாதரம்!

சுதந்திர உணர்வினைச் சுண்டிவிட்டு உறங்கிக் கிடந்த இந்திய மக்களை வீறுகொண்டெழச் செய்த ''வந்தே மாதரம்'' அந்த நாட்டு சுதந்திர போர்வீரர்களின் யுத்த பேரிகையாக முழங்கலாயிற்று.

சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் மகான் பங்கிங் சந்திர சட்டர்ஜி இந்தப் பாடலைப் பாடினர். சுதந்திரத் தீயை பாரதம் எங்கும் கொழுந்துவிட்டுப் பரவச் செய்த அவரது ''ஆனந்த மடம்'' நாவலில் இப் பாடல் இடம்பெற்றது.

அந்த ஆன்மீகக் கவிஞரின் உள்ளத்தில் எழுந்த இக் கவிதைப்பொறி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே சுட்டெரித்து விரட்டக் காரணமாயிற்று. ஒரு கவிஞனின் சொல்லுக்குள்ள சக்திக்கு வந்தேமாதரம் ஓர் உதாரணம்.

### மோனி பக்சி: தமிழ்: வ குகசர்மா

ஸ்ரீ அரவிந்தர் 1894ம் ஆண்டு இந்து பிரகாஸ் என்னும் பத்திரிகையில் 'பங்கிங் சந்திர சட்டர்ஜீ' அவர்களைப் பற்றித் தொடர்ந்து ஏழு கட்டுரைகள் எழுதியுள்ளார். அந்தக் கட்டுரைகளில் பங்கிங்சந்திரர் மேல் தமக்குள்ள உயர்ந்த மதிப்பைத் தெரிவித்துள்ளார்.

தனது கட்டுரைத் தொடரின் முடிவில் ''வருங்காலச் சந்ததியினர் இந்திய விடுதலை வீரர்களுக்குப் புகழ்மாலை சூட்டும்போது புகழுக்கு ஒரு இடந் தேடித்திரியும் அரசியல் வாதியின் தலையிலோ, ஆரவாரஞ்செய்யும் ஒரு சமூக சீர்திருத்தவாதியின் தலையிலோ அதனைச் சூட்டமாட்டார்கள். ஆனால் புகழை நோக்கமாகக் கொண்டு ஆர்ப்பரியாமல் தனது உள்ளத்தெழுந்த உணர்ச்சியால், அமைதியாக ஒரு சிறந்த நூலைத் தந்த பங்கிங்சந்திரரது சிரசிலே நிச்சயம் சூட்டுவார்கள்'' என எழுதியுள்ளார்.

தன்னிடம் இருப்பது என்ன என்று உணராமலே, நாட்டிற்கு என்னத்தைக் கொடுக்கிறோமென்று உணராமலே, இயல்பாகவே அவர் ஒரு மொழியை, ஒரு இலக்கியத்தை, ஒரு தேசத்தையே உருவாக்கினர்'' என்று கூறியுள்ளார்.

ஆரம்பத்தில் பங்கிங்சந்திரர் ஒரு மொழி இயல் நிபுணராக விளங்கினர். பிற்காலத்திலோ ஒரு தீர்க்கதரிசியாக விளங்கினர். இன்றிலிருந்து சரியாக ஒரு நூற்றுண்டிற்கு முன்னே 'வந்தேமாதரம்' என்னும் அழியாத கீதத்தைத் தந்த ஒரு முனிவர் அவராவார்.

வந்தேமாதரம் தேசிய உணர்ச்சியைப் பரப்பிவந்த அந்த நாளிலே, அது சுதந்திர உணர்ச்சியின் ஒரு சின்னமாக விளங்கிவந்தபோது, அந்த மந்திரத்தை உச்சரித்தவர்கள் அன்றைய அந்நிய அரசாங்கத்தினால் பெருந் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டார்கள். இதனால் ஏற்பட்ட உணர்ச்சி நெருப்பை அடக்க முடியாமல, உலகப் பெரும் சாம்ராச்சியமாகிய பிரிட்டிஷ் அரசாங்கத்தை நடுங்கச்செய்தது. இந்தியா சுதந்திரப் போராட்டத்திற்குரிய ஆன்ம பலத்தை வந்தேமாதரம் என்ற மந்திரத்திலிருந்தே பெற்றுக்கொண்டது. ஆகவே இந்த நேரத்தில் புகழ் நிறைந்த வங்காள எழுத்தாளரைப்பற்றி நாம் சிந்திப்பது பொருத்தமுடையது. 1876 செப்டம்பரில் ஆக்கப்பட்டு வந்தேமாதரகீதம் பின் அவரது ஆனந்த மடம் என்னும் நாவலில் சேர்க்கப்பட்டது.

வங்காளதேசத்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஒளியுள்ள இரத்தின மணிகளுள் ஒருவராகிய பங்கிங் சந்திரர் கல்கத்தா சர்வகலாசாலையின் முதற்பட்டதாரியாக விளங்கினர். பிற்காலத்தில் தற்கால இலக்கிய சிற்பியாகவும் இந்திய அரசியல் தீர்க்கதரிசியாகவும் நினைவுகூரப்படுகிறார். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை பற்றியோ அவரின் உத்தியோகத்தைப்பற்றியோ இங்கு சிந்திப்பது உபயோகமற்றது அவருடைய சாந்தமான தோற்றம் உத்தியோக உயற்சி, சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் இவை யாவும் அவரை அறிந்தவர்களைக் கவர்ந்தது என்பது உண்மை. ஆனால் இலக்கியத்தில் அவர் அடைந்த முன்னேற்றமே அவரின் புகழுக்குக் காரணமெனலாம்.

பங்கிங்சந்திரரின் கூர்ந்தமதி அவருடைய மொழியை வளர்த்து நாகரிகத்தின் எல்லாநிலையில் உள்ளவரும், மகிழ்ச்சியுடன் ஏற்கத்தக்க ஓர் இலக்கியத்தை ஆக்க உதவியது.

அவர் என்றும்அழியாத நாவல்களை மாத்திரம் எழுதவில்லை. சிறந்த கட்டுரைகளையும் எழுதினர். பங்கிங் சந்திரர் ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும், தத்துவஞானியாகவும் விளங்கி

(9ம் பக்கம் பார்க்க)

# யாழ்லயன் களியாட்டு விழா-77

## (யாழ். புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக)

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.**

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிகளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளையாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளராகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என்பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப்பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் எவ்விதமான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன்களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

### போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவனியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாணவர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட்டம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக்கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி. [17] யாழ்.அழகு ராணிப் போட்டி, [18[ வாண வேடிக்கை.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள்ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..................................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..................................

விலாசம்: ..................................

வயது: ....................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித்துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப்பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற்கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

**பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்**

..........................................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம், (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந்தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திகதிக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

# திருடர்கள் !

**கே. என். நடராஜன்**

"ஐயோ! ஐயோ!! என்னை அடிக்காதேங்கோ! என்னை அடிக்காதேங்கோ!!"

கடைக்காரனின் கையில் அகப்பட்ட அநதச் சிறுவன் அவலக்குரல் எழுப்பிக்கொண்டிருந்தான்

"திருட்டுக்கழுதை! களவா எடுக்கிறாய்!!" மீண்டும்கடைக்காரனின் கைவரிசை தொடர்கிறது.

"ஐயோ! ஐயோ!! தெரியாமல் எடுத்திட்டன்! அடிக்காதேங்கோ! அடிக்காதேங்கோ!! பசிக்குது!! பசி பொறுக்கமுடியாமல் எடுத்திட்டன்! இனிமேல் இப்பிடிச் செய்யமாட்டேன்" அழுதபடி மன்றாடுகிறான் அந்தச் சிறுவன்.

வேடிக்கை பார்த்தபடி ஒரு கூட்டமே கடையைச் சூழ்ந்து நிற்க கழுகுவாயில்அகப்பட்ட கோழிக்குஞ்சுபோல நிற்கும் அவனைப் பார்த்து எவரும் பரிதாபப்பட்டதாகத்தெரியவில்லை. மாறாக அதிலும் சில புண்ணியவான்கள் தமது கைவரிசையையும் அவனில் காட்டுகின்றனர். மீண்டும் அதே அவலக்குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

கடைக்காரரின் கை விரல் அடையாளங்கள் சிறுவனின் கன்னங்கள் இரண்டிலும் சித்திரம் வரைந்து விட்டதுபோல இருந்தது. பயத்தினால் உடல் நடுங்கியபடியே நிற்கிறான் அவன்.

பத்து வயது இருக்கும். பஞ்சத்தில் வாடிய உடல்! ஒட்டிய கன்னங்கள்! குழி வீழ்ந்த கண்கள்!! எண்ணெய்கண்டறியாத பரட்டைத்தலை!

இந்த வயதில் அவனுக்கும் ஓர் பசிப்போராட்டமா அவனது பசி பாவத்திற்கு தூபமிட, இன்று பலர் முன்னிலையில் திருட்டுப் பட்டத்தைச் சுமந்தபடி நிற்கிறான்.

கொடிது- கொடிது வறுமை கொடிது-அதனிலும் கொடிது இளமையில் வறுமை ...!

இத்தனைக்கும் அவன் செய்த திருட்டை எமரும் விசாரிக்கவில்லை. திருடப்பட்டபொருள் எது என்பதைக் கடைக்காரனும் கூறவுமில்லை. திருட்டுப் போன பொருளை இனி எடுக்கவும் முடியாது.

யானையின்பசிக்குஅகப்பட்ட ஒரு கரும்புத் தடல் போல- அவனின்அகோரப்பசிக்குஅந்த அன்னாசித்துண்டு அவன் வயிற்றுக்குள் போய்விட்டது. அவன் பசிக்கு அது எந்த மூலைக்கு?

ஏழையின் வீட்டில் பிள்ளைச் செல்வம் நிறைந்திருக்கும். ஆனால், சில பணக்காரர்கள் வீட்டில் அதற்கு எதிர்மாறாக குழந்தை குட்டிகள்இல்லாமல் தவம் இருப்பார்கள். அதேதவ நிலைதான் இந்தக் கடைக்காரனுக்கும்! எனவே அவனுக்கு அந்தச் சிறுவனில் பாசம் ஏற்படாமல் இருப்பது விந்தையல்ல. ஆனால் சுற்றி நின்று வேடிக்கை பார்த்த அத்தனை பேருக்கும் அதே நிலைதானா? கடவுளே!!

பெற்றவள்ஒருத்திக்குத்தான் பிள்ளையின் பாசம் தெரியும்.

"ஐயோ! என்ரை பிள்ளைய அடிக்காதேங்கோ! என்ரை பிள்ளையஅடிக்காதேங்கோ!!" என்று அலறி அடித்துக் கொண்டு ஓடிவரும் ஒருபெண்ணைக்கண்டு கூடிநின்றகூட்டம் விலகிக்கொள்கிறது.

அவள் தோளிலே இன்னுமொரு நிர்வாணக் குழந்தை! அதைத் தொடர்ந்து இன்னும் இரண்டு அரைநிர்வாணக் குழந்தைகள் ஓடிவருகின்றன. அவளோடு சேர்ந்து குடும்பக் கட்டுப்பாட்டை நம் மக்கள் எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறார்கள்! பாமரமக்கள் இதை உணர்ந்து கொள்வதில்லையோ அல்லது அவர்களுக்கு அது நன்கு உணர்த்தப்படுவதில்லையோ தெரியவில்லை.

கடைக்காரனிடம் கெஞ்சி மன்றாடி அழுது ஒருவாறு சிறுவனை விடுவித்துக் கொண்டு வெளியே வருகிறாள் அவள்.

"என்ரை பிள்ளையை இப்படிப்போட்டு அடிச்சிருக்கிறியே ஐயா! என்ரைபிள்ளைய இரக்கமில்லாமல் இப்பிடி அடிச்சிருக்கிறியே ஐயா!!" சிறுவனின் கன்னங்களைத் தடவித் தடவிஅணைத்தபடி அழுதழுது அழைத்துச்செல்கிறாள் அந்தப் பெண்.



கழுகின்வாயிலிருந்து வீழ்ந்த கோழிக்குஞ்சை ரத்தந்தோய்ந்தபடி தாய்க்கோழி அணைத்துக் கொள்வதுபோல் இரத்தக்கண்ணீர் வடித்துச் செல்கிறாள் அவள். தாயைத் தொடர்ந்து மற்றைய இரு பிள்ளைகளும் அழுதழுது செல்கின்றன.

ஏழைகள் வீட்டில் பணத்திற்குப் பஞ்சம். ஆனால் அங்கு பாசத்திற்குப் பஞ்சமே இருப்பதில்லை. ஏழைகளின் வயிறு என்றும் நிறைந்திருக்காது. ஆனால் அவர்கள் இதயங்களில் அன்பு என்றும் நிறைந்திருக்கும். ஓட்டைக் குடிசையில் தான் உயரிய பல நற்பண்புகள் நிறைந்திருக்கும்.

"ஏண்டா திருடினாய்! ஆருடா உன்னைக் களவெடுத்துத் தின்னச் சொன்னது? இந்தப் பிள்ளையளும்தானே காலையில் இருந்து பட்டினியோட கிடக்குதுகள். உனக்குமட்டும் அவ்வளவு பசியே!" சிறிது வெறுப்போடு அவனைக் கேட்டுக்கொண்டு நடக்கிறாள் அவள்.

பதிலேதும் பேசாமல் விக்கி விக்கியழுதபடியே நடக்கிறான் அவன்.

தன் வறுமையிலும் அவள் தன்மானம் உந்த அப்படிக் கேட்டாள். தெருவோரம் தாண்டி எங்கோசென்று மறைகின்றன அந்த பஞ்ச ஜீவன்கள்.

° ° °

நாட்கள் சில கடந்தன. மீண்டும் அதே கடையில் ஒரே ஜனக்கூட்டம். கடைக்கு முன்னால் பொலிஸ் வாகனம் ஒன்று நிற்கிறது.

கடையின் உள்ளே ஒரே தடல்புடலாக- அமர்க்களமாக விருக்கின்றது,

சிறிது நேரத்தின் பின் சுற்றி நின்ற ஜனக்கூட்டத்தை விலக்கிவிட்டு முன்னே ஒரு பொலிஸ் அதிகாரி வர அதே கடைக்காரமுதலாளி தலையைத் தொங்கப்போட்டபடி வெளியே வருகிறார். அவருக்குப் பின்னால் சில பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சில பெட்டிகளைத் தூக்கிக்கொண்டுவந்து ஜீப்பில் ஏற்றுகின்றனர்.

கடைக்காரர் உட்பட யாவரும் ஜீப் வாகனத்தில் ஏறிக்கொள்ள . ஜீப் பறந்து சென்று மறைகிறது.

குழந்தைப் பிள்ளைகளுக்கான பால்மாவைப் பதுக்கிவைத்துக் கறுப்புச் சந்தையில் விற்ற கடைக்காரர் சட்டத்தின் பிடியில் அகப்பட்டுச் செல்வதை கூடி நின்ற கூட்டம் வேடிக்கை பார்த்த விட்டு விலகிச்செல்கிறது.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்பதுபோல அந்த ஏழையின் கண்ணீர்தான் கடைக்காரருக்குக் கூரிய வாளாகிவிட்டதோ!

தன் ஒருநேரப்பசியைத் தாங்காது வயிற்றை நிரப்ப அந்தச் சிறுவன் திருடனாக மாறினான்.

(9-ம் பக்கம் பார்க்க)

# ஓய்வுபெறும் கல்லூரி அதிபர்



வடமராட்சியில் புலோலி ஆண்கள் ஆங்கிலக்கல்லூரியை நினைவு கூரும்போது இன்னுமொரு பெயர் தவறாது நினைவுக்கு வரும். அதுதான் திரு. வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்களது பெயர்.

உண்மையான ஒரு சமூக சேவையாளனுக்கு இன மத பாகுபாடுகள் இல்லை. இவர் வேறு பல கல்லூரிகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய பொழுது அவர் தமது கல்லூரிக்கும்' அவ்வூர் மக்களுக்கும் ஆற்றிய தொண்டும் உதவியும் அளப்பரியன. மக்களுக்குச் செய்யும் சேவைதான் 'மகேஸ்வரனுக்கு' செய்கின்ற சேவை என்று அடிக்கடி சொல்வதோடு, அவ்வாறு வாழ்ந்து வந்த திரு. வல்லபுரம தம்பிப்பிள்ளை புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலைக்கு 1956-ம் ஆண்டு உதவி ஆசிரியராக இடமாற்றம் பெற்றுவந்த போதுதான் அவருடைய மாணிக்கப்பண்புகள்பரிணமிக்கலாயின. அப்பொழுதுதான் "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற பொன்மொழியின் கருத்தை நானும் என்போன்றவர்களும் உணரலானோம்.

தொண்டைமானாறு மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய இரண்டு ஆண்டுகள் தவிர எஞ்சிய காலம் முழுவதையும் புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலைக்கே சதா உழைத்துக் கொண்டிருந்தார்.

தன்னலம் அடியோடற்றுக் கல்லூரி நலனென்றே பெரிதாக மதித்து அவர் பாடுபட்டதன் விளைவாக இந்துக்கல்லூரி 'வேலாயுதம் மகாவித்தியாலயம், எனப் பெயர் மாற்றப்பட்டு இன்று ஒரு முதற்றரக் கல்லூரியாக இலங்குகின்றது. இதற்குக் காரணமாகவும், கருவியாகவும் இருந்தவர் ஓய்வுபெற்றுப்போகிறார் என்றபோது அங்கே கல்வி கற்கும் பேற்றையும், அவராற் கற்பிக்கப்படும் பாக்கியத்தையும் பெற்ற நாமெல்லாம் கவல்கிறோம். நாம் என்ன அழமுடியுமானால் அந்தக் கல்லூரியில் ஒவ்வொரு கதவும், யன்னலும் மேசையும், கரும்பலகையும் அழும், அத்தகையபெருமைக்கு உரியவர் திரு. தம்பிப்பிள்ளை.

கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், தேசிய ஆசிரிய சங்கத்தின் தலைவராகவும், கரவெட்டி நுணுவிற் பிள்ளையார் கோயிற் தொண்டர் சபைத் தலைவராகவும் இருந்து அவர் ஆற்றுகின்ற பட்சபாதமிலாச் சேவைகளைப் போற்றுமல் இருக்கமுடியாது. அவற்றிற்காக வடமராட்சி மக்கள் நன்றி பாராட்டாமலும் இருக்கமுடியாது.

--புலோலியூர்
செல்வத்தம்பி
மாணிக்கவாசகர்

இரசிக சிரோமணி பொன். கிருஷ்ணபிள்ளை—7

# காட்டாத இரசனையெல்லாம் காட்டியவர் !

ங்கள் எல்லோரும் காவடியைப் பார்த்திருப்பீர்கள். பூச்செண்டு மேலேயில்லாத காவடியும் காவடிதான். ஆனால் செண்டுள்ள காவடிதான் அழகானது, கவர்ச்சியானது, அதுபோல ஒருவரின் வாழ்க்கை வரலாற்றையோ இலக்கிய வாழ்க்கையையோ சற்று விரிவாக எழுதும்போது அவர் வாழ்க்கையில் நடந்தவற்றையும், கண்டு கேட்டவற்றையும் (துண்டு துணுக்குகளை) கோவை செய்து பூச்செண்டு போல ஒருமித்துக் காட்டினால்தான் அழகாக எழுத்து முடிவுறும்-கவர்ச்சியாக இருக்கும்- என்பதனால் செந்தமிழ்மணி பொ. கி. அவர்களைப்பற்றிய இந்தக் கடைசிக் கட்டுரையில் அவர் பற்றிய சில துண்டுதுணுக்குகளை எழுதியிருக்கிறேன்.

## தன்னைப்பற்றி மிகத் தாழ்த்திப்பேசுதல்

மேடைகளில் சிலர் பேசத் தொடங்கும்போது சில முறைகளைக் கையாளுகிறார்கள். கலைமகள் பத்திரிகை ஆசிரியர் கி. வா. ஜ., சாமிநாதையாது குரு வணக்கத்தோடு தொடங்குவார். பண்டிதமணி சி. க. எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருளை முன்னிட்டு' என்று சபைக்குக் கேளாமல் மெதுவாகத் தொடங்குவார். சுவாமி விபுலானந்தர் அவர்கள் 'தொடுக்கும் கடவுள் பழம் பாடல்' என்ற பிள்ளைத் தமிழ் பாடலைப் பாடித் தொடங்கிப் பேசக் கண்டிருக்கிறேன். இப்படி சிவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி விநாசித்தம்பி என்போர் ஒவ்வொரு முறைவைத்திருக்கின்றனர். செந்தமிழ்மணி பொ. கி. எடுத்த எடுப்பிலேயே தலைவரையும் உடன் பேசவந்திருப்போரையும் மிகமிக உயர்த்தித் தன்னைப் பற்றி நாயேன் எளியேன் அடியேன் ஒன்றுக்கும் உதவாதவன் என்றெல்லாம் மிக மிகத் தாழ்த்திப் பேசுவார். அவருடையபணிவு அப்படியானது. இதைச் சில தடவை கேட்ட பண்டிதமணி சி. க. கிருஷ்ணபிள்ளை மேடையிலே இப்படியெல்லாம் ஏன் பேசுகிறார்? சிலர் தவறாக அவரைப்பற்றி எண்ணப்போகிறார்களே என்று கவலையோடு எனக்குப் பல தடவை சொல்லியிருக்கிறார்.

## பிறரைப்பற்றிஉயர்த்திப் பேசுதல், எழுதுதல்

தன்னை எவ்வளவுக்கெவ்வளவுதாழ்த்திப் பேசுகிறாரோ அவ்வளவு தம்மால் மதிக்கப் பட்டவர்களை வாய்குளிர உயர்த்திப்பேசுவார். இவர்அப்படி உயர்த்திப் பேசும்போது வார்த்தைகளை வெறும் உதட்டளவில் சொல்லாது இதயத்தைத் திறந்துசொல்வார். சைவப் பாடசாலைகளைக்கட்டி சைவ ஆசிரியர்களைப் பெருக்கி சைவ அநாதைகளை வளர்த்த சைவ வித்தியாவிருத்திச் சங்க மனேஜர் இராசரத்தினம் அவர்களை - அந்த மகான்- என்றே குறிப்பிடுவார். அப்படியே தொல்காப்பியம் கரைகண்ட மகா வித்துவான் கணேசையர் அவர்களை கணேசைய முனிவர் என்றே பேசுவார். இப்படி அதிபர் சண்முகரத்தினம். ஈழகேசரி பொன்னையா போன்றவர்களை முறையே மகான்-வள்ளல்என்றெல்லாம் பேசியும் எழுதியும் இருக்கிறார்.

## இதோ! ஒரு கடிதம்

சிலர் மேடையில் பேசும்போது புகழ்வதும் பிறரிடம் பேசும்போது இகழ்வதும் கடிதங்களில் எழுதும் போது தாழ்த்தி எழுதுவதும் உண்டு. செந்தமிழ்மணி அப்படிப்பட்டவர் அல்லர். அவர் அமரராவதற்குச் சில நாட்களுக்குமுன் எழுதிய கடிதம் ஒன்றில் பருத்தறிவுவாதியும் நாவலனை கோவை பாடியவருமாகிய புலோலியூர் கந்தமுருகேசனார் அவர்களைப்பற்றி எழுதும் போது பின்வருமாறு எழுதியிருக்கிறார்:-

## இரசிகமணி கனக. செந்திநாதன்

கந்தமுருகேசனார் வாணி விலாசம் பெற்ற பேரருளாளர் எந்த நூலையும் ஒரு முறை பார்த்தமாத்திரத்தில் விளங்கிக்கொள்ளும் நுட்ப அறிவு உடையவர். இலக்கணத்துறையில் அதி நுட்பமான பேரறிவுபடைத்தவர். இன்றிருக்கும் பல சட்டத்தரணிகள் இவர் உதவியினாலேயே தமிழும் தமிழ் வன்மையும் பாலபண்டிதத் தன்மையும் பெற்றவர்கள். இவர் நாவலன்கோவை ஒன்று நானூறுக்கு மேலுள்ள பாடல்களைச் செய்துள்ளார். இது செந்தமிழ்மணியின் மேலான உள்ளத்துக்கு ஒரு சான்று.

## அறிக்கை ஒன்றில் செந்தமிழ்மணிபற்றி ஒரு குறிப்பு

சண்முக குமரேசன் பொ. கிருஷ்ணபிள்ளையைப் பற்றி எழுதிய கட்டுரையில் அருமையான் ஒரு துணுக்குக் காணப்படுகிறது. அது பின்வருவது:-

கொழும்பு ஆசிரியர்கலாசாலையிலுள்ளதமிழ் மாணவர்களை பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு மாற்றப்போவதாக அறிந்தேன். அப்பொழுது ஆங்கிலச் செய்தித்தாளொன்றில் - பலாலி ஆசிரியர்கலாசாலைக்குப் போய் பார்வையிட்ட ஒருவர்ஒழுதியதாக ஓர் அறிக்கை இருந்தது. போதிய வசதிகள் பலாலியில் இல்லை. வைதீகக் கொள்கையுடைய ஒரு பண்டிதர் அங்கிருக்கிறார். எல்லா மாணவர்களும் மரக்கறி உணவுதான் உண்ண வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இவையெல்லாம் இக்காலத்திற்கு ஏற்றவையல்ல என்ற கருத்துப்பட அவ்வறிக்கை அமைந்தது. அதை வாசிக்கும்போது அதில்குறிக்கப்பட்ட பண்டிதர், பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களே என்றுணர்ந்தேன். பலர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் ஆசார வாழ்க்கையை ஆசிரிய மாணவர்களிடையே பரப்பும் அன்னாரின் நல்லெண்ணம் போற்றுதற்குரியது.''

## பெருமை பாராதவர்

குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்கும் செந்தமிழ் மணிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சபையின் பொதுக் காரியதரிசியாகிய இராசரத்தினத்தை ஏ, சிவலைப்பொடியர் என்றுதான் அழைப்பார் அவ்வளவு அன்பு. சன்மார்க்க சபை வெளியிட்ட சைவசமய போதினி என்ற சமயபாட நூல்கள் ஐந்தையும் பிழையற தகுந்த வசனங்களோடு திருத்தி- உபகரித்தவர் அவர். எந்த விழா நடந்தாலும்- அவரைப் பேச்சாளராகப் போட்டாலும், நேரே போய்ச் சந்தியாது ஒரு தபாலட்டை மூலம் எழுதி அறிவித்தாலும் கட்டாயம் வந்துசேர்வார். மோட்டார் வாகனம் வரும் என்றுகூட எதிர்பார்க்காமல் ஓர் ஆசிரிய கலாசாலை மாணவனைக் கூப்பிட்டு பைசிக்கிள் எடுத்துவரச் செய்து அவன் ஓட இவர் பின்னுக்கு இருந்தே கூட்டத்துக்கு வந்துவிடுவார். எவ்வளவு எளிமை. மற்றவர்களுக்குச் சங்கடம் கொடுக்கக்கூடாது என்ற பெருந்தன்மை அவருடையது.

## சேவைநலம் பாராட்டு விழா

1965-ம் ஆண்டளவில் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலையில் அரசாங்கக் கல்வித்திணைக்களம் வெளியிடுவதற்கான தமிழ் மலர் பாடப் புத்தகக்குழு வேலைசெய்து கொண்டிருந்தது. கவிஞர் சச்சிதானந்தன், கவிஞர் அம்பிகைபாகன், பிரபல எழுத்தாளர் சு. வே., கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி, பண்டிதர் வி. சி. கந்தையா ஆகிய எழுத்தாளர்கள் அதில் இருந்தனர். இடையில் நானும் போய்ச் சேர்ந்தேன். அதை அறிந்த பண்டிதமணி 'சி. க.' அவர்கள், பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களது இலக்கிய சேவைக்காகவும் ஆசிரிய சேவைக்காகவும் ஏதாவது செய்யவேண்டும். அவர் இலகுவில் சம்மதிக்கமாட்டார். எழுத்தாளர்களாகிய நீங்கள் அவரைச் சம்மதிக்கச்செய்து நல்ல பட்டமும் ஒன்று கொடுத்துக் கௌரவியுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டார். அதை நான் எழுத்தாள நண்பர்களிடம் கூறி, கவிஞர் அம்பி அவர்களை இதற்கான முயற்சியில் ஈடுபடும் படி கேட்டுக்கொண்டேன். அவர் பழைய மாணவர் சங்கத்தைக் கூட்டி பெரு முயற்சிசெய்து 'இலக்கியச் சோலை' என்ற அவரது கட்டுரைத் தொகுதி நூலை வெளியிட்டதோடு 13-2-65-ம் திகதி பெரு விழா ஒன்றையும் எடுத்தார். பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களையும் அவர் மனைவியாரையும்வசாவிளான் சந்தியிலிருந்து மேளவாத்தியங்களோடு அழைத்துக் கோலாகலமாக வரவேற்க அம்பிகைபாகன் ஆயத்தமானார். இதை அறிந்த பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் 'இப்படியெல்லாம் செய்ய வேண்டாம்' என்று கூறியதோடு 'நான் கூட்டத்திற்கே வரமாட்டேன்' என்று மறுத்தார். ஒரு சாதாரண விடயத்திற்கே விளம்பரம் செய்யும் இந்த உலகத்தில் விளம்பரமே வேண்டாத கிருஷ்ணபிள்ளை அவர்களது மனப்பான்மையைக் கண்டு வியந்தேன். ஆனால் கூட்டம் நன்றாகவே நடைபெற்றது. பண்டிதமணி சி. க., புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, கல்லூரி அதிபர்கள் ,ஆசிரிய கலாசாலை மாணவர்கள் எல்லோரும் குழுமியிருந்த சபையில் 'செந்தமிழ் மணி' என்ற பட்டத்தைக்கொடுத்துப் பலரும் வாழ்த்தினர். அப்பட்டம் இன்றளவும்நின்று நிலவுகின்றது.

அவரதுஇலக்கிய சேவையை மதித்து யாழ். இலக்கிய வட்டமும் தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் அவரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்ஸை • தவறவிட்டார்

ஒருமுறைவசாவிளான் சந்தியில் நானும் அவரும் சா. து. சுப்பிரமணிய யோகியாரது தமிழ்குமரி முதலிய கவிதைத் தொகுதியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர் அத்தொகுதியிலுள்ள கண்ணகி, மதலேனள், அகலிகை என்ற பாடல்களைப் பற்றிச் சுவைசொட்டச் சொட்ட பேசி முடித்துவிட்டு, கண்மணி ராஜம் என்ற அருமையான கவிதைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினர். அப்போது அவர் போக வேண்டிய பஸ் வந்துகொண்டிருந்தது. பஸ் வருகிறது என்று நான் மெதுவாகக் குறிப்பிட்டேன். அவர் பஸ் போனால் போகிறது அடுத்த பஸ்ஸில் போகலாம் என்று கூறிவிட்டு பாட்டையே ரசித்து எனக்குக் கூறினர். முக்கியமாக 'பம்பு மலைக்காட்டில் பாயாமல் என் மனைவி. கும்பமுலைக் காட்டில் குதித்திட்ட மான் குட்டி' என்ற பாடலிலிருந்து 'காட்டாதன வெல்லாம் காட்டி எமைப் பிரிந்தாய் மீட்டும் எங்கள் வீட்டினிலே விளையாட வாராயோ என்ற பாடல் வரைக்கும்' பாடிக் காட்டி என்ன அருமையான கவிதைகள் என்று வாய்விட்டுக் கூறி முடித்துவிட்டு அடுத்த பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

## முடிவுரை

செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களை நினைக்கும் போது 'காட்டாதனவெல்லாம்' என்ற இப் பாடல் எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆம், நாமும் அவரிடம் வேண்டுவது

'காட்டா இரசனை
யெல்லாம் காட்டி
எமைப் பிரிந்தீர்
மீட்டும் இந்த நாட்டி
னிலே விமர்சிக்க
வாரீரோ'

என்பதுதான். அவருடைய நினைவு நின்று நிலைபெறுவதாக. (முற்றும்)



உடுவில் வெட்டுக்கட்டைப் பிள்ளையார் கோவில் கட்டட நிதிக்காகச் செல்வி நந்தினி பரராஜசிங்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13-ம் திகதி) யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பரதநாட்டிய விருந்தளிக்க இருக்கிறார். இம் மாதம் 19ம் திகதி கொழும்பில் பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் மண்டபத்திலும் அவரது பரதநாட்டிய நிகழ்ச்சி இடம்பெறும்.

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

உண்மைச் சம்பவம்

# கப்பலை மூழ்கடித்த பிணம்!

பண்டைய எகிப்தியர்கள் இறந்தவர்களின் உடல்களைத் தைலமிட்டு பதப்படுத்தி கெடாமல்செய்து பிரமிட்டுகளினுள் பத்திரப்படுத்தி வைத்தனர். அந்த உடல்களும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அப்படியே உள்ளன. அத்தகைய உடலுக்கு மம்மி (Mummy) என்று பெயர். இத்தகைய மம்மிகளை (உடல்களை) உலகெங்கிலுமுள்ள பணக்காரர்களும்-கலைப்பொருள் சேகரிப்பாளர்களும் வாங்கிவைப்பதுண்டு. இத்தகைய மம்மி ஒன்றினை வாங்கிவைத்தவர்களின் கதியைப் பார்ப்போம். உண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் இவை.

சென்ற நூற்றாண்டில் ஒருநாள் அந்த அராபிய வியாபாரி தலையைச் சொறிந்து கொண்டார்; கையைப் பிசைந்துகொண்டார். ஏன் திடீரென்று வியாபாரம்படுத்து விட்டது?

''உன்னிடமுள்ள அந்த மம்மியைத் தலையைச் சுற்றி எறிந்துவிடு. அதற்கு ஏதோ சாபம் இருக்கிறது'' என்று சிலர் சொன்னார்கள். ஆம் அந்த அராபிய வியாபாரியிடம் அத்தகைய மம்மி ஒன்று இருந்தது. வெளிநாட்டினர் அதை ரொம்ப ஆர்வத்துடன் வாங்கிக்கொண்டதால் அந்த அராபிய வியாபாரிக்கு அதை விற்பதில் எந்த வித கஷ்டமும் இருக்கவில்லை.

மூன்று ஆங்கிலேய இளைஞர்கள் வெகு மகிழ்ச்சியுடன் அந்த மம்மியை வாங்கிக் கொண்டனர். ''சாபமாவது மண்ணாவது'' என்று சிரித்தார்கள் அவர்கள். நைல் நதியில் ஓர் உல்லாசக் கப்பலில் அந்த மூவரும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். மூன்று பேரிலும் இளைஞன ஒருவன் அறையில் மம்மி வைக்கப்பட்டிருந்தது. திடீரென்று அன்று இரவு ஒரு துப்பாக்கி வேட்டு ஒலித்தது, அவன் அறையில். அலறி எழுந்தான். அவன் கையில் இரத்தம் கொட்டியது. ஆம் யாரோ அவனைத் துப்பாக்கியால் சுட்டு விட்டனர். கையையே வெட்டி எடுக்கும்படி நேர்ந்துவிட்டது.

யார் சுட்டார்கள்? எதற்காகச் சுட்டார்கள்? இன்று வரை யாருக்கும் தெரியாது?

மறுநாள் இரவு மூவரில் வயதில் பெரியவரின் அறையில் மம்மியை வைத்தனர். அன்று இரவே அவர் காணமல்போய் விட்டார். சுவடே காணோம். இரவு நேரத்தில் அவர் தவறிப் போய் கடலில் வீழ்ந்திருக்க வேண்டும். பாவம் அவருக்கு நீச்சல் தெரியாது. எப்படிக் கடலில் விழுந்தார்? ஏன் உதவி கேட்டு கூச்சலிடவில்லை? இன்றுவரை யாருக்கும் தெரியாது.

ஒரு வழியாக உல்லாசப் படகு கெய்ரோவை அடைந்தது. மூன்றுமவர் அந்த மம்மியுடன் ஓட்டலுக்குச் சென்றார். அவருக்காக ஏற்பாடுசெய்யப் பட்டிருந்த அறையில் மேஜை மீது ஒரு தந்தி காத்திருந்தது. பிரித்துப் பார்த்ததும் பைத்தியம் பிடித்தவர்போலானார். அவருடைய வாழ்நாள்சேமிப்பு முழுவதும் போட்டுவைத்திருந்த வங்கி திவாலாகிவிட்டது. அதுதான் தந்தியில் இருந்தசெய்தி. கையில் ஒரு சதம் இல்லை. அந்த மம்மிதான் ஒரே சொத்து. துர்ரதிஷ்டம் பிடித்த மம்மியை அவர் அடுத்த விநாடியே விற்றுத் தொலைத்ததில் ஆச்சரியமில்லை. அதன்பிறகு கொஞ்சநாளைக்கு அந்த மம்மியைப்பற்றிய தகவல் எதுவும் இல்லாதிருந்தது.

மேடம் புளவாட்ஸ்கி என்ற பிரம்மஞான சங்கத்தலைவி இங்கிலாந்தில் ஒரு கிராமப்புற மாளிகைக்குச் சென்றார். எல்லா வசதிகளும் நிரம்பிய அந்த இடத்தில் இரண்டொரு நாள் ஓய்வெடுத்துச் செல்ல எண்ணியிருந்தார். அவர் வீட்டுச் சொந்தக்காரர்கள் விழுந்துவிழுந்து உபசரித்தார்கள். ஆனால் மேடம் பிளவாட்ஸ்கியால் ஏனோ அங்கு இருக்கமுடியவில்லை. என்னவோ ஒரு திகில் ஏற்பட்டது அவருக்கு. திடீரென்று ஊருக்குக் கிளம்பிவிட்டார். ''ஏதோ ஒரு தீயசக்தி இங்கே உலவுகிறது. என்னால் தூங்கவே முடியவில்லை'' என்று சொல்லிப் புறப்பட்டார். வீட்டுக்காரருக்கு ஒரே திகைப்பு. தன் வீட்டில் எந்தவித தீய சக்தியும் இல்லையென்று சத்தியம்பண்ணியதோடு ''வாருங்கள் நீங்களே மாளிகையின் எல்லாப் பகுதியையும் சுற்றிப் பார்கலாம்'' என்று சொல்லி மேடம் பிளவாட்ஸ்கியை அழைத்துக்கொண்டுவீட்டைச் சுற்றிக் காட்டினார். இருவருமாக ஓர் இடம் விடாமல் ஆராய்ந்தார்கள். ஓரிடத்திலும் ஒன்றும் தென்படவில்லை. இறுதியில் வீட்டுக்குள் உள்ள ஒரு மச்சின் கீழ் வந்தார்கள். 'இங்கேதான் அந்தக் கெடுதலான சக்தி எங்கேயோ உள்ளது. அதை என்னால் உணர முடிகிறது' என்று மேடம் பிளவாட்ஸ்கி கூவினார்.

## அங்கே இருந்தது என்ன?

மச்சின்மீது ஏறிப்பார்த்தார்கள். இருண்ட மூலையில்புழுதியடைந்துகிடந்ததுஅந்தமம்மி. யாரோ எப்போதோ வாங்கி வைத்திருந்தனர். மேடம் பிளவாட்ஸ்கி அந்த மாளிகைக்கு முன்பின் வந்தவரல்ல. மம்மியொன்று அங்கேயிருப்பது அவருக்குத் தெரியவே தெரியாது. அப்படியும் அந்தத் தீயசக்தியை அவரால் உணர முடிந்தது!

மாளிகைச் சொந்தக்காரர் அவசரம் அவசரமாக அந்த மம்மியை பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள எகிப்திய மம்மிப் பிரிவுக்கு விற்றுவிட்டார். மியூசியக் கட்டிடத்திற்குள் இரண்டு கூலியாட்கள் அதை எடுத்துச் சென்றார்கள். அவர்களில் ஒருவன் இடறி விழுந்து காலை முறித்துக்கொண்டான். மற்றவன் அடுத்தநாள் திடீரென்று இறந்துபோனான் எந்த வித நோயும் இல்லாமல்.

மியூசியத்தின் மம்மி பிரிவுத் தலைவர் டாக்டர் பட்ஜ் இந்தக் கதைகள் பூராவையும் கேள்விப்பட்டார். அதைப் பற்றி ஆராயவேண்டி ஒரு பிரபல புகைப்பட ஸ்ரூடியோவில் மம்மியை ஒரு புகைப்படம் எடுத்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். ஸ்ரூடியோ ஆள் ஒருவர் வந்து புகைப்படம் எடுத்துச் சென்றார். மறுநாள் ஓட்டமாய் ஓடிவந்தார் டாக்டர் பட்ஜியிடம். அவர் முகம் பேயறைந்தமாதிரி இருந்தது. மம்மியின்மீது [illegible] டப்பட்டிருக்கும் [illegible] முகம் படத்தில் இல்லையாம். அதற்குப் பதில் உயிருள்ள ஒரு பெண்ணின் முகம் தெரிகிறதாம். பார்க்கவே பயங்கரமாக சூனியக்காரி போல் தோன்றுகிறதாம். ''என் கமரா லென்சில் ஏதாவது கோளாறு? என்னவென்றே புரியவில்லை'' என்றார். டாக்டர் பட்ஜ் இக்கதைகளை அவரிடம் சொன்னார். புகைப்படக்காரர் பித்துப் பிடித்தவர் மாதிரி வீட்டுக்குப் போனார். படுக்கையறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார். துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலைசெய்து கொண்டுவிட்டார்.

பிரிட்டிஷ் மியூசியத் தலைவருக்குகிலிபிடித்துவிட்டது. இவ்வளவு பயங்கரச்சக்திகொண்ட மம்மியைத் தங்களிடம் வைத்திருக்கவேண்டுமா? என்று நடுங்கிப்போய் அமெரிக்கக்கோடீஸ்வரர் ஒருவரைப் பிடித்தனர். எகிப்து சம்பந்தப்பட்டது எதுவானாலும் வாங்குபவர் அவர். அவர் தலையில் இந்த மம்மியை கட்டினர்.

பிரம்மாண்டமான உல்லாசக் கப்பலில் தனது விலைமதிக்க வொண்ணாத பொக்கிஷத்துடன் புறப்பட்டார்அந்த அமெரிக்கக் கோடீஸ்வரர். 1912-ம் வருடம் ஏப்ரல் 15-ம் தேதி அட்லாண்டிக் மஹாசமுத்திரத்தில் பனிமலை ஒன்றில் மோதி 1517 பேருடன் மூழ்கிவிட்டது அந்தக் கப்பல். பிரிட்டனுக்குச் சொந்தமான அந்தக் கப்பலின் பெயர் டிட்டானிக் என்பது. உலகிலேயே மிகப் பெரிய கப்பல் விபத்து அதுதான்.


இனியாருக்கும்ஆபத்து ஏற்படுத்தமுடியாதபடி ஆழ் கடலின் அடியில் சுமார் 10 ஆயிரம் அடி ஆழத்தில் அந்த மம்மி அமைதியாகத் துயில் கொள்கிறது.

## புதையலும் சாபமும்

எகிப்து சம்பந்தப்பட்ட மற்றொரு அதிசய உண்மையைக் காணபோம். எகிப்தியர்கள் தங்கள்சமாதிகளில் அதாவது பிரமிடுகளினுள்பெரும் செல்வக்குவியல்களைச்சேர்த்துவைத்தனர். ஆனல் அவர்கள் காலத்திலேயே திருடர்கள் அதைக் கொள்ளையிட ஆரம்பித்தனர். எனவே தங்கள் சமாதிகளை ரகசியமான இடங்களில் கட்ட ஆரம்பித்தனர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எகிப்திய பேரரசை ஆண்ட இளஞ் சக்கரவர்த்தி பராவன்டூ-டன்-காமனின் சமாதியைத்தேடி எடுக்க ஹாவர்டு கார்ட்டர் என்ற பிரிட்டிஷ் தொல் பொருள் ஆராய்ச்சி நிபுணர் 1921-ல்முயற்சிஆரம்பித்தார். இந்த எகிப்து அரசன் ஏறத்தாழ கி.மு. 1361முதல் 1352 வரை ஆட்சி புரிந்து தன்னுடைய பதினெட்டாவது வயதிலேயே மரணம் அடைந்தவன். ஹாவர்டு கார்டரின் முயற்சிக்கு கார்னர் வோன் என்ற பிரிட்டிஷ் செல்வந்தர் பொருளுதவி செய்தார். ஆறு ஆண்டுகாலசலியாத உழைப்பிற்குப் பின்பூமிக்கடியிலிருந்து 1926-ம்ஆண்டு டூ-டன்-காமனின் சமாதியையும் - பதப்படுத்தப்பட்ட அவனது உடலையும் கோடிக்கணக்கான ரூபாய் பதிப்புள்ள தங்க நகைகளையும் கண்டுபிடித்தார். இவை அனைத்துமே மூவாயிரம்ஆண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்டவை. டூ-டன்-காமனின் சமாதியில் நுழைந்தவர்களுக்கு ஆபத்து வரும் என்று வாய் வழிச்செய்தி ஒன்று எகிப்தில்

(9-ம் பக்கம் பார்க்க)

தொகுத்தவர்:
வி. ரவிச்சந்திரன்




மகாராஜா குழுக் கம்பனிகளின் மூல வளங்களையும் நிதி நிபுணர் குழுவின் திறமையையும் பின்பலமாகக் கொண்டு மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் உங்கள் பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்ய வாய்ப்பளிக்கிறது.

குறைந்த பட்சம் ரூ. 500/- அல்லது அதற்கும் அதிக முதலீட்டுடன் நீங்கள் ஆரம்பிக்கலாம். மாதாந்தம் அல்லது காலாண்டுக்கோ அரையாண்டுக்கோ ஆண்டுக்கோ ஒரு தடவையில் வட்டி கிடைக்கும். பணத்தை அவசரத்துக்கு இலகுவாக மீட்டுக் கொள்ளவும் வசதி அளிக்கிறோம்.

தனிநபராக அல்லது பலர் கூட்டாகச் சேர்ந்து நிலுவை முதலீடு செய்யலாம்

நீங்கள் பெறக்கூடிய உழைப்பின் உச்சம்-

36 மாதங்களுக்கு வருடாந்தம் 13%

24 மாதங்களுக்கு வருடாந்தம் 12%

12 மாதங்களுக்கு வருடாந்தம் 10%

வட்டியையும் திரும்ப முதலீடு செய்வது பற்றிப் பேசிக் கொள்ளலாம்.

மேற்கொண்டு தகவல் பெற, கூப்பனை நிரப்பி அனுப்புங்கள். தொலைபேசியிலோ, நேரிலோ தொடர்பு கொண்டாலும் மேலும் விபரம் தெரிவித்து, நிபந்தனையின்றி நிலுவை முதலீட்டுப் பத்திரங்களை வழங்குவோம்.

நிலுவை முதலீடுகள்
மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
லிமிட்டெட்
த. பெ. எண். 319. கொழும்பு
அன்புடையீர்,
நான்/நாம் தங்கள் நிலுவை முதலீட்டுத் திட்டத்தில் முதலிட விரும்புகிறேன்/விரும்புகிறோம். தயவுசெய்து, நிபந்தனையின்றி மேலும் விபரங்களும் விண்ணப்பப் பத்திரங்களும் அனுப்பி வையுங்கள்:
முழுப்பெயர்/பெயர்கள்: ______
விலாசம்: ______
______ ஒப்பம்

மகாராஜா
இன்வெஸ்ட்மென்ட்ஸ்
லிமிட்டெட்

மகாராஜா குழுக் கம்பனிகளின் ஓர் உறுப்பு
54, பாங்ஷால் வீதி, கொழும்பு 11
தொலைபேசி: 23603-6

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 & 9-30 P. M.
LEONARD NIMOY SUSAN HAMPSHIRE
in
**BAFFLED!**
(Color)
7-3-77ந் திகதி மீண்டும் வருகிறார்கள்.
**CRAZY BOYS MUSKE TEERS**
குறும்புக்கார கத்தி வீரர்கள்

வின்ஸர் [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - ஸ்ரீவித்யா சுந்தரராஜன் ஜெயசுதா நடித்த
**அபூர்வ ராகங்கள்**

5-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

வெலிங்டன் [யாழ். நகர்]
எஸ்.எஸ்.ஆர்- தேவிகா
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**மறக்கமுடியுமா?**

லிடோ போன்: 7693 [யாழ். நகர்]
சிவகுமார் — ஜெய்சித்ரா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
**வெள்ளிக்கிழமை விரதம்**
(புதிய பிரதி)

## கப்பலை மூழ் ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்படுவதுஉண்டு. அதே போல ஹாவர்டு கார்டரைத் தவிர இந்தக்கண்டுபிடிப்பில் பங்குகொண்ட அனைவருமே ஏதோ சாபக்கேடு பிடித்தது போல துர்மரணம் அடைந்தனர். இந்த மர்மத்தை இன்று வரை யாரும் விளக்கவில்லை.

......

## பத்திரிகை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்ப்பத்தில் கூறுகின்றேன்.

விமானநிலையத்தில் சகல சோதனைகளும் முடிந்ததும் 'போர்ட்டர்' எமது சூட்கேசுசனை தூக்கிவத்து கார் ஒன்றில் வைத்தார். கார்புறப்பட்டது.

(அடுத்த வாரம்)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
ஞாயிறு 10-30
**Secret Door**

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
**தேன்சிந்துதே வானம்**

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
**அன்பைத்தேடி**

## இந்திய ...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர். அவருடையதத்துவங்கள் ஆயிரக்கணக்கானோரின் மனதில் ஆழப்பதிந்து பெருமாற்றங்களை ஏற்படுத்தியது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் 33 வருடங்கள் நீதிபதியாகக் கடமையாற்றினர். அந்தக்காலம் ஒருவகையில் பிரயோசனமுடையதாகும். அவருடைய உத்தியோககாலத்தில் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டமையால் அவர்தம் அறிவை விசாலமாக்கிக்கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பலவித தன்மையுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்திக்கவும் அதன்மூலம் விசாலமான அநுபவத்தைப் பெற்றுக்கொள்ளவும் உத்தியோகம் உதவியது. ஆனல் பங்கிங் சந்திரர்வங்காளஅரசாங்கத்திற்கு செய்தசேவையை அவர் இலக்கியம் மூலம் நாட்டுக்களித்த சேவையுடன் ஒப்பிடும்போது முன்னது வெறும் அற்பமாகவே தோற்றும்.

(அடுத்த வாரம்)

## சிறுகதை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் கடைக்காரனே தனது இரும்புப் பெட்டியைத் துரிதமாக நிரப்பிவிடவேண்டி பலரை வஞ்சித்து மோசடி செய்தான்!

பசிக்காக ஒரு துண்டு அன்னசியைத் திருடிய அச்சிறுவன் எங்கே! நாட்டையும் மக்களையும் வஞ்சித்துத் தன் இரும்புப் பெட்டியை நிரப்புவதே கண்ணுய் இருக்கும் இந்த சமூக விரோதி எங்கே!

சமூகம் இரண்டையும்தான் வேடிக்கைபார்க்கிறது.

(யாவும் கற்பனை)

சிக்கனத்தின் சின்னம்:
சிறப்பின் பிறப்பிடம்!
**ரெட் கவ் பிரான்ட் பட்டர் (SUBSTITUTE)**
எமது நாட்டு மக்களின் சிக்கன செலவிற்காக சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது
மற்றும் பட்டர் கேக், சொக்லட் ரோல், கோப்பி, டெல்கம் பவுடர்
யாழ்ப்பாணப் பகுதி எமது விற்பனையாளர்கள்:
∵ சிறி சாயி ஸ்டோர்ஸ்
∵ RICH COFFEE COOLBAR
∵ செல்வமலர் கூல்பார்
∵ KENWOOD COFFEE
∵ அண்ணா கோப்பி பார்
யாழ்ப்பாணம் கூல் பார்
பஸ் நிலையம்
∵ ராஜா கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி
தரமானது, சுவையானது, மலிவானது
கண்டி, அநுராதபுரம், காலி, மாத்தறை, அம்பாறை, மட்டக்களப்பு, மன்னர், வவுனியா ஆகிய இடங்களுக்கு நம்பிக்கையான ஏஜன்ஸி தேவை.
விபரங்கட்கு:-
**ராஜா என்டர் பிறைசஸ்**
43, கண்டி ரோட் — கடவத்தை
கிளை: 19, வெலகெதர ரோட் — பதுளை.
15 பட்டர் லேபல்களை அனுப்பி பட்டர் டின் ஒன்றை இனமாகப் பெறுங்கள்.

ஸ்ரீதரில்.. யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
பாட்டின்றி பரதமில்லை!
பரதமின்றி பாட்டில்லை!
இத்தகைய சக்திவாய்ந்த இரு பெருங் கலைகளையும் ஒன்றாக இணைந்து உருவாக்கப்பட்ட வண்ண ஓவியம்தான்...


★ பாட்டும் பரதமும் மோதிக்கொள்ளும் பண்புமிகு சித்திரம்!
★ சிவாஜிகணேசன் (இருவேடங்களில்)
★ ஜெயலலிதா
★ விஜயகுமார்
★ கோபிகிருஷ்ணா
★ மனோகர்
★ சுந்தரராஜன்
★ மனோரமா
மற்றும் பலர் நடிககும்
**பாட்டும் பரதமும்**

RIO (Jaffna) Daily 4 Shows
BY POPULAR DEMAND
**KARATE AMAZONS**

ராஜா [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் - பிரமிளா சிவகுமார் - லக்ஷ்மி (பசு) நடித்த
**கோமாதா என் குலமாதா**
(புதிய பிரதி)

ராணி [யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் — தீபா - சாவித்திரி நடித்த
**அந்தரங்கம்**

வாரசாரம்

# இலங்கையிலும் ஒரு ஜெகஜீவன்ராம்!

சோதிடர்களின் கணிப்பு என்னவோ தெரியாது ஆனல் இந்தியாவிலும் இலங்கையிலும் இன்று அரசியல் கோள்கள் வக்கரித்து நிற்கின்றன என்று அரசியல் ஆருடம் கூறிவிடலாம்!

இந்தியாவில் ஆட்கி மன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு கிழமைகள் கூட இல்லை.

இரண்டு வருடங்களாக இந்திரா அரசியல் பிரதி விவசாய பாசன அமைச்சராகப் பதவி வகித்துவந்த பிரபு தாஸ் பட்டேல் தமது பதவியை ராஜினுமாச் செய்ததுடன் ஆளும் காங்கிரஸிலிருந்து வெளியேறி ஜெகஜீவன்ராம் தலைமையிலான ஜனநாயகக் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்.

இது எதிர்க்கட்சிகளுக்கு புதுத் தெம்பளித்திருக்கிறது.

இந்திராவின் மாமியும் அமரர் நேருவின் சகோதரியுமான பண்டிட் விஜயலட்சுமி இந்திராவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளுக்குஆதரவாகப்பிரசாரம் செய்வதும் இந்திராவுக்கு ஒரு பெரிய பாதிப்பு.

அவசரகால நிலையில் சிறை வைக்கப்பட்டவர்கள் சிறையில் நடத்தப்பட்ட முறை அவர்கள் அனுபவித்த சித்திரவதைச் சம்பவங்களெல்லாம் இப்போது வெளிவந்து இந்திராவுக்கு எதிராகப் பெரும் பூதம் மாதிரி உருவெடுத்து நிற்கிறது.

தேர்தலில் இந்திராவின் ஆளும் காங்கிரஸ் தோற்றுலும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி பீடத்துக்கு வந்தாலும்இந்தியாவில் நிலையான அரசாங்கம் ஏற்படுமா என்பது கடந்த காலங்களில் பல மாநிலங்களில் கூட்டணிகள் ஆட்சிக்குவந்து மறைந்த அவலங்களைக்கொண்டு ஐயுற இடமுண்டு.



எதிர்க்கட்சிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து உதவிகிடைப்பதாக பிரதமர் இந்திரா கூறி வருகிறார்.

இந்தியாவில் நடைபெறும் அரசியல் சதுரங்க அலைகள் இலங்கையிலும் மோதத் தொடங்கியுள்ளன.

ஆறு மாதத்துக்குள்தேர்தல் நடக்குமென்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா அறிவித்திருக்கிறார்.

1970ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி இப்போது இல்லை.

எஸ். எம். ஜி.

சென்ற வருடம் லங்கா சமசமாஜக்கட்சி வெளியேற்றப்பட்டது.

## இங்கும் ஒரு ஜெகஜீவன்ராம்

சில வாரங்களுக்கு முன் மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேறியதுடன் இப்போதுசுதந்திரக் கட்சி அரசாங்கமே ஆட்சியிலிருக்கிறது.



சுதந்திரக் கட்சியிலிருந்து நந்தா எல்லாவலையும் மற்றும் நால்வரும் வெளியேறியது கூட சுதந்திரக்கட்சிக்கு ஒரு தாக்கமல்ல திரு. ரி. பி. சுபசிங்காகைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் பதவியிலிருந்தும் ஆளும் கட்சியிலிருந்தும்வெளியேறியது ஒரு பெரிய தாக்கம் என்றே சொல்லவேண்டும்.

இந்திராவின் ஆளும் காங்கிரசிலிருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும்திரு. ஜெகஜீவன்ராம் திடீரென்று விலகியது போன்று திரு. ரி. பி. சுபசிங்காவும் தமது ராஜினமாவின் மூலம் இங்கும் ஒருஜெகஜீவன்ராம் என்ற பெயரை எடுத்துள்ளார்.

திரு. சுபசிங்காவின் ராஜினமாவுடன் இடதுசாரிகளின் முன்னணி ஒன்று உருவாவது நிச்சயமாகிவிட்டது.

ஐக்கிய சோஷலிஸ முன்னணி என்ற பெயரில் உருவாகும் இந்த முன்னணிக்கு திரு. சுபசிங்காவே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

இதே சமயம் 'தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம்எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற்ருல் வெளிமாகாணங்களிலுள்ள தமிழ் வாக்குகள் சுதந்திரக் கட்சிக்குக்கிடைக்குமென்று எதிர்பார்க்கிறதுசுதந்திரக்கட்சி.

தேசிய அரசுப் பேரவையின் கூட்டத் தொடர் மே மாதம் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளபோதிலும் திரு. சுபசிங்காவின் ராஜினமாவுக்குப் பின் தோன்றியுள்ள நிலைமையினல் மே 19ம் திகதிக்கு முன்னதாகவே பேரவை கலைக்கப்பட்டு தேர்தலுக்குத் தேதி குறிப்பிடப்படலாமென்றும் அரசியல்வட்டாரங்களில்எதிர்பார்க்கிறார்கள், பார்ப்போம்.

# அணிந்திருந்த பூணூலையும் சிறையில் அறுத்தார்களாம்

## இந்தியபத்திரிகை ஆசிரியர் ஒருவரின்புகார்

சென்னை, மார்ச் 5

பிராமணகுலத்தைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கடந்த வருடம் மிசாவில் கைதுசெய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் சிறைக்காவலர்களால் நிர்வாணமாக்கப்பட்டு அவரது மேனியிலிருந்த பூணூலையும் காவலர்கள் அறுத்தெறிந்தனராம்.

இத்தகவல் அடங்கிய புகார் ஒன்றை 'கசையடி' பத்திரிகையின் ஆசிரியரும் 'முக்குல முரசு' பத்திரிகையின் சிறப்பாசிரியருமான டி. எஸ். வி. ராமன் என்பவர் தமிழக அரசின் உள்துறை செயலாளருக்கு அனுப்பியுள்ளார்.

திரு. ராமன் 76-ம் ஆண்டு ஜனவரியில் காங்கிரஸ். கட்சியைச் சேர்ந்த முன்னள் தமிழக முதல்வர் திரு. பக்தவத்சலம் முன்னிலையில் இந்திரா கங்கிரஸில் சேர்ந்துகொண்டாராம்.

எனினும் அவர் ஒரு மாதம் முடிவதற்குள் மிசாவில் கைதாகிசென்னை மத்தியசிறையில் அடைக்கப்பட்டாராம்.

அவர் தமது புகாரில் தாம் சிறையில் அனுபவித்த கஷ்டங்களை விபரமாகக்கூறியுள்ளார். நான் சிறைக்குக்கொண்டுசெல்லப்பப்பட்டதும் சிறை அதிகாரி அழைப்பதாகக்கூறி இரு வார்டன்கள் என்னை அழைத்துச் சென்றனர்.

அவர்கள் கொண்டு கதறக் கதற என்னை உதைத்தனர். நான் எவ்வளவோ கதறியும் அவர்கள் கேட்கவில்லை.

சிறிது நேரம் அடித்துவிட்டு என்னை நிர்வாணமாக்கினர். பிராமணகுலத்தைச் சேர்ாத எனது மார்பில் பூணூல் இருப்பதைக்கண்ணுற்ற அவர்கள் பூணூலைப்பிடித்திழுத்து கேலி செய்தனர்.

மதச்சார்பற்ற அரசு என்று கூறிவரும் ஒரு அரசின் ஆட்சியில் அரசாங்கதரப்பினர் இப்படிசெய்வதுகுறிப்பிடத்தக்கது

முன்பு ஒருமுறை நான் சிறை அதிகாரி ஒருவருக்கு எதிராகச் சாட்சியமளித்தேன். அதை மனதில்வைத்தே என்னை இப்படி பழிவாங்கியிருக்கின்றனர்.

என்னைக் கதறக் கதற அடித்தபின்னர்கூட எனக்கு முதல் உதவியோ எதுவித சிகிச்சையுமோ அளிக்கப்படவில்லை.

ஒரு விசாரணை வைத்தால் உண்மை நிலைதெரியும். நானே வந்து விஷயத்தை விளக்குவேன். சட்டத்தைக்காப்பாற்ற வேண்டியவர்களால் மீண்டும் எனக்கு இப்படியான ஆபத்து வரும் என்றும் தெரியும். எனினும் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.


அரிசி ஆலை விற்பனை

வவுனியாவின் வடக்கில் முல்லைத்தீவுக்குச் செல்லும் பிரதான பாதையிலுள்ள நெடுங்கேணி கிராமத்தில் பச்சை அரிசி, புழுங்கல் அரிசி குற்றுவதற்கேற்பமுழு வசதிகளுடனடங்கிய ஆலை விற்பனைக்குள்ளது. முன்னறிவிப்பால் பரிசீலனை செய்ய அனுமதி பெறவும், தொடர்புகொள்ளவும், வேண்டியமுகவரி: எஸ்.மகாதேவன், 32, கின்ரோஸ் அவனியூ, கொழும்பு-4. 5591




## தவக்கால நற்சிந்தனை

''அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம்கவனத்தில்காணப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்களின்மேல் வருகிறதைபூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.''

(மத்தேயு 24:30)

சிலுவை ஆண்டவர் நமக்கு அளித்த அடையாளமாகும். கிறிஸ்துவை நாம் மட்டுமல்ல, உலகத்திலுள்ள அத்தனை மக்களும் நினைக்கின்றபோது கிறிஸ்துநாதருக்கு முன்னல் நம் நினைவுக்கு வருவது சிலுவையே.

அதே சிலுவையைப் பாருங்கள். அங்கே இயேசுநாதர் தொங்கிக்கொண்டு தம்முள் தாம் வருந்திவிடும் இரத்தக் கோலம், நம் உள்ளங்களிலே உண்மைத் தத்துவத்தை விளக்கி, நினைந்து நினைந்து: கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து அவ்வுத்தமனைப் புகழ்ந்து பாடி மரணமிலாப் பெருவாழ்வைப் பெற வழிகோலும் சிலுவைமேல் சிந்திய இரத்தத்தோடு நிற்கும் காட்சி நம் மனதில் படிந்துவிட்டால் அதைவிடப் பெருமை எதுவாக இருக்கமுடியும்? அதுவே பேரின்ப எல்லையாகுமல்லவா?

(ஞானஒளி)

## அரியாலை சித்திவிநாயகர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் கடந்த மாதம் 16-ம் திகதிமுதல்நடைபெற்றுவரும் சதுர் இலக்ஷ நாமார்ச்சனை இம்மாதம் 8-ம் திகதி பூர்த்தியாகவிருக்கின்றது. அன்று மாலை 6 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் கோபுரவாசலில் சந்திர பிம்ப பூசையும் பஞ்சவிநாயகர் உற்சவமும் இடம்பெறும்.

## குளம்புனரமைப்பு

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சியை அடுத்துள்ள கனகாம்பிகை குளம் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில்புனரமைக்கப்படவுள்ளது.


சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு





## மரண அறிவித்தல்

### M. R. தம்பையா

இளைப்பாறிய ஆசிரியர் M. R. தம்பையா காலமாகிவிட்டார். இவர் தையலம்மையின் அன்புக்கணவரும் தவராசலிங்கம் (ஆசிரியர், பரியோவான் கல்லூரி), சரோஜினிதேவி. சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், குமுதினி M. கைலாசபிள்ளை, A.P. ராமலிங்கம் ஆகியோரின் மாமனுரும் ஆவார். பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நல்லூர் செட்டித்தெரு 8-ம் இலக்க இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 5 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 5622


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O, Box 49, Jaffna; Telegram: Eelanadu Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.